# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**அக்டோபர் 2001 ஜீவியம் 7 மலர் 6**


## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 15 |
| லைப் டிவைன் | 16 |
| சாவித்ரி | 22 |
| லைப் டிவைன் - கருத்து | 24 |
| நான்கு கட்டுப்பாடுகளும் நான்கு விடுதலைகளும் - பாகம் II | 26 |
| கன்சல்டன்சி | 43 |
| பகவானுடைய இதர நூல்கள் | 45 |
| அன்பர் கடிதம் | 47 |
| அஜெண்டா | 51 |
| எது நியாயம் | 53 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 58 |


* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**


**வருடச் சந்தா ரூ.60/-**

## யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**661) இந்த நான்கு நிலைகளையும் நாம் ஒரு கரணத்திலாவது புரிந்து கொள்ள வேண்டும். இதைச் சமூக வளர்ச்சியில் எளிதில் புரிந்து கொள்ளலாம். அதுவே ஆரம்பத்திற்கு நல்ல முறை.**

*சமூகத்தில் இந்நிலைகளைப் புரிந்து கொள்வது நல்ல ஆரம்பம்.*

பிழைக்க சிரமம் என்பவன் பிழைக்க முடிவது முதல் நிலை.

அதே நிலையில் அதிக வசதி பெறுவது வளர்ச்சி.

நிலையுயர்வது அடுத்த கட்ட வளர்ச்சி.

இந்தக் கட்டத்திற்கில்லாதது என்று நாம் அறியும் அடுத்த கட்டம் பரிணாமத்திற்குரியது.

உதாரணம்:

சர்க்கார் உத்தியோகம் கிடைக்கவில்லை என்பது முதல் நிலையாகவும், அதில் தொடர்ந்த பிரமோஷன் தடையின்றி வந்து உயர்வதை வளர்ச்சியாகவும், தனது திறமையால் சிறந்து IAS பெறுவது அடுத்த கட்ட வளர்ச்சியாகவும், அவரின் சிறப்பை அறிந்து ஓர் அகில இந்திய ஸ்தாபனம் அவரைத் தலைவராக அழைப்பதைப் பரிணாமம் என்றும் கொண்டு ஒவ்வொரு நிலைக்குரிய விளக்கத்தையும் பார்ப்போம்.

சர்க்கார் உத்தியோகத்திற்குத் தகுதியுள்ள ஆயிரம் பேரில் கிடைப்பது நூறு பேருக்கு என்றால், (வழி தவறி முயல்பவர்களை விலக்கி) அவர்கள் முயற்சியை சுருக்கமாக சொன்னால்,

1. சர்க்கார் உத்தியோகத்திற்குள்ள தகுதியை அழிக்கும் எந்த செயலையும் விலக்கியவராக இருப்பார்கள்.



2. அதற்குரிய பரீட்சை, நேர்முகத் தேர்வில் முதல் நூறு இடங்களில் வர, கல்லூரிப் படிப்பில் காட்டிய ஆர்வத்தைப் போன்று பதின் மடங்கு காட்டுவார்கள். அத்துடன் பொறுமை, நிதானம் சமயோசிதம், சாதுர்யம், சிறந்த பழக்கம், தைரியம் போன்றவை நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்றுத் தரும். இவர் குமாஸ்தாவாகவோ, ஆபீசராகவோ தேர்ந்தெடுக்கப்படுவர்.

இவர்களுக்குள்ள தகுதியிருந்தும், அதற்குரிய முயற்சியில்லாதவர், முயற்சியிருந்தும் இதர தகுதிகள் - பழக்கம், தைரியம், etc இல்லாதவர் வேலையைப் பெறுவதில்லை. இது முதல் நிலை வெற்றியானாலும், இந்த நிலையிலிருப்பவர்களுக்கு இவ்வெற்றி பெரிய வெற்றியாகும். இந்த நூறு பேரில் தொடர்ந்து தடையின்றி பிரமோஷன் பெற்று நல்ல பெயருடன் உயர்ந்து வருவது 20, 30 பேருக்கு மேலிருக்காது. அவர்கள் முதல் நிலையில் உள்ள தகுதிக்கு மேல் உயர்வதற்குத் தேவையான முயற்சியையும், புதிய நிலைக்குத் தேவையான நாணயம், கௌரவம், நல்ல பெயரும் எடுக்க வேண்டும், தொடர்ந்தும் பல ஆண்டுகள் அந்நிலை நிலைக்க வேண்டும். இந்த நூறு பேரில் 30 பேர் தொடர்ந்து பிரமோஷன் பெற்றால் IASக்கு வாய்ப்பு ஓரிருவருக்குக் கிடைக்கிறது. அவர்கள் நல்ல பெயர், நாணயம், திறமையில் தலை சிறந்து விளங்குபவராக இருப்பார்கள். அவர்களில் - அது போன்ற 100 பேரில் - மூன்று நான்கு பேர் பிரபலமடைந்து தனியார் துறையில் அல்லது சர்க்காரில் சிறந்த தலைமைப் பதவிக்கு அழைக்கப்படுகின்றனர்.

எல்லாத் துறைகளிலும் - குடும்பம் நடத்துவது, விவசாயம் செய்வது, வியாபாரம் செய்வது, ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்வது, எலக்ஷன் நடத்துவது, அன்னையை ஏற்றுக் கொள்வது - இந்த 4 நிலைகளுக்குரிய வித்தியாசத்தை நாம் அறிவது பயன் தரும். அதில் சில உண்மைகளும் விளங்கும்.

போதிய முயற்சியில்லாதவனுக்கு முதல் நிலையே இல்லை.

போதிய முயற்சி தொடர்ந்து இல்லாதவனுக்கு இரண்டாம் நிலை உயர்வு கிடையாது.

முயற்சியுடன், தகுதியிருந்தால்தான் மூன்றாம் நிலையுண்டு.

முயற்சியும், தகுதியுமிருந்து, சிறப்பான சுபாவம் பல இருப்பவரே நான்காம் நிலைக்குரியவர்.

நாமுள்ள துறையிலும், நமக்குத் தொடர்புள்ள துறைகளிலும் இந்நிலைகளைச் சிந்தனை செய்து, ஆராய்ந்தால், நிலைகளுக்குள்ள வேறுபாடும், அவற்றிற்குள்ள நிபந்தனைகளும் விளங்கும். அந்தத் தெளிவை மற்ற எல்லாத் துறைகளுக்கும், குறிப்பாக அன்னையை ஏற்றுக்கொள்வதிலும் கண்டால் அன்னையை அடுத்த அடுத்த நிலைகளில் எப்படி அடையலாம் என விளங்கும்.

**நாம் எந்த நிலைக்குத் தகுதியுள்ளவரானாலும், அன்னையை ஏற்றுக் கொண்டால் ஒரு நிலை உயர்ந்து அடுத்த நிலை பலிக்கும் என்பது அன்னைக்குரிய சிறப்பு.**

❋ ❋ ❋

**662) சமுதாயம் சட்டத்திற்குட்பட்டது, மனித சுபாவத்தால் கட்டுப்பட்டது, என்பதை அறிவுடைய ஒருவன் புரிந்து கொள்ளலாம். தெளிவில்லாதவன் கண்ணில் இது படுவதில்லை.**

**மனித சமுதாயம் அதன் தெளிவுடைய முன்னோடிகளால் நடத்தப்படுகிறது என்பதை அறிய அதிக தீட்சண்யம் தேவை. முதல் இரு நிலைகளையும் தத்துவ ஞானி விளக்கலாம். மூன்றாவதை விளக்க ஒரு கவிஞன் தேவை. அவன் யுகதர்மத்தை நாடும் கவிஞனாக இருந்தால் மனித சமுதாயத்தின் இலட்சியக் குறிக்கோள் தனி மனிதனின் அந்தரங்க அபிலாஷைகளை வெளிப்படுத்துவதைக் காணலாம்.**



**தன்னையறிந்த யோகி தன் ஆன்மாவின் அசைவுகளை அறிவான். அதைப்போலவே மற்ற ஆன்மாக்கள் ஆன்மாவின் தாயாரை நோக்கிப் போவதையும் அறிவான். இதை உலகின் ஆன்மீகப் பரிணாமத் திருஷ்டி என்போம்.**

**அக்காட்சி ஆசையைத் தொட்டால் ஆர்வமாகிறது. அங்கு ஆரம்பித்து சரணாகதி மூலம் தன்னை பூரணமாக அர்ப்பணிக்கிறது.**

***மனித சுபாவம் என்ற சட்டத்தால் சமுதாயம் கட்டுப்படாது. ஞானி, கவி, யோகி இதை அறிவார்.***

சமுதாயச் சட்டதிட்டங்களை, அதன் ஸ்தாபனங்களை, கல்வித் திட்டத்தை, பண்பு முறையை, மார்க்கெட் நிலவரத்தைப் பள்ளியிலும் கல்லூரியிலும் விவரமாக விளக்குகிறார்கள். பத்திரிகைகள் மேலும் தெளிவுபடும் விவரங்களை அளிக்கின்றன.

மார்ட்டின் லூதர் சமுதாயத்தைவிட மேம்பட்டவர். உள்ளொளியால் உலகம் இயங்குகிறது. சட்டத்தை, தோற்றத்தைப் புறக்கணித்து, உள்ளொளியைப் பாராட்டு என்றார். சாக்ரடீஸ் அறிவின் சிறப்பை உலகுக்கு அறிவித்தார். மகாத்மா காந்தி அஹிம்சையைச் செயல்படுத்தினார். டால்ஸ்டாய் மனித இயல்புகள் மனிதனை ஆள்வதை விவரித்தார். இந்த மேதைகள் ஒருவகையில் ஞானிகள், தத்துவம் பேசுபவர்கள், மனித சுபாவத்தின் இரகஸ்யங்களை உலகுக்கு எடுத்து உரைத்து நம் நிலையை நமக்கு விளக்கி வழிகாட்டியவர்கள்.

சமுதாயம் மேலெழுந்த வகையிலே சட்டத்தின் சக்திக்கும், அடுத்த நிலையிலேயே மனிதனின் அபிலாஷைக்கும் கட்டுப்படுவது போல், மூன்றாம் நிலையில் பூமியின் சுபாவத்திற்கும், மனித சுபாவத்திற்கும் (universal laws of nature and man) கட்டுப்படுவதை ஷேக்ஸ்பியர், ஹோமர், டாண்டே, வால்மீகி, வியாசர்,

கன்பூஷியஸ், இளங்கோ அடிகள் போன்ற பெருங்கவிகள் கண்டு, அவர்கள் கண்ட காட்சியைக் காவியங்களாக வடித்தவை ஆயிரமாயிரம் ஆண்டு உலகை ஆண்டு வருகின்றன.

இதுவே சிருஷ்டியின் முடிவல்ல. முடிவான நிலை பேராசிரியருக்கோ, மேதைக்கோ, கவிஞனுக்கோ புலப்படுவதில்லை. அதைக் காண்பவன் யோகி. திரிகாலத் திருஷ்டி மூலம் அவன் உலகத்தை அற்புதமாகக் காண்கிறான். தீயவனான துரியோதனனும், இராவணனும், கம்சனும் யோகியின் பார்வையில் பிரம்மமாகக் காட்சியளிக்கின்றார்கள். அவருக்குத் திருடனுடைய அடி திருவடியாகத் தெரிகிறது. கொலையாளியின் நெஞ்சில் கருணை தெரிகிறது. துரோகம் செய்பவன் இறைவனுடைய கருவி, இறைவனுக்குரிய விஸ்வாசத்தை மனிதரிடம் துரோகமாகக் காண்கின்றான். பூகம்பமும், புயலும், வெடிக்கும் எரிமலையும் துர்அதிர்ஷ்டமல்ல, ஆண்டவனின் அரவணைப்பு அமிர்தமாக இல்லாமல், அனலாக இருக்கும் நிகழ்ச்சிகள். விபசாரியின் தொழில் தீமையானதன்று, சாதாரண ஆன்மாவால் செய்ய முடியாத சேவையை ஏற்றுக்கொண்ட பெரிய ஆன்மாவின் தியாகம், என்று அறிய முடிகிறது.

திருஷ்டி - காட்சி - ஆன்மாவைத் தொட்டால் தவம் பலிக்கும், மனத்தைத் தீண்டினால் மேதையாகி பெருநூல்களை எழுதுவான். அவன் உணர்வின் உறைவிடமான பிராணனைத் தொட்டால், இறைவன் மீது ஆர்வம் எழுந்து, பக்தியாக உருவாகும். ஆர்வம் தனக்குரிய 9 நிலைகளைக் கடந்து - நம்பிக்கை, வழிபாடு, பணிவு, துதி, அர்ப்பணம், ஆனந்தம், அன்பு, பூரிப்பு, சரணாகதி - ஒன்பதாம் நிலையில் சரணாகதியாகிறது. சரணாகதியை உலகம் அறியும். வைஷ்ணவம் சரணாகதியைப் போற்றுகிறது. கீதைக்குச் சரணாகதியே மூச்சு. அவை மோட்சத்தையடைய சரணாகதியை நாடின. பூவுலகம் இறைவன் வாழும் திருத்தலமாகும். பொன்னொளி வீசும் புண்ணிய பூமியாக மாறுவதற்காக பகவான் சரணாகதியை நாடுகிறார்.

❊ ❊ ❊



**663) இந்தப் பெரிய ஆன்மீக அனுபவத்தைச் சமாதி நிலையில் காண்பது ஆன்மீக அனுபவமான காட்சி. அதையே ஒரு சிறு வேலை மூலமாகப் பெறலாம். நடைமுறையில் அவ்வேலை நமக்குக் கட்டுப்பட வேண்டுமானால், பூரணயோகத் திருஷ்டி தேவை.**

- *ஆசை திருஷ்டியால் சரணாகதியைப் பூர்த்தி செய்யும்.*
- *திருஷ்டி தரும் சமாதி;*
- *பூரண யோகத் திருஷ்டி வாழ்வை யோகமாக்கும்.*

புலன்கள் அவிந்த பின்னரே தியானம், நிஷ்டை, அதன் சிகரமான சமாதி நிலை. தியானத்தின் நிலைகள் பல. விழிப்பான நிலை ‘ஜாக்கிரதா’ எனப்படுவது. புலன் அவிந்து உள்ளே மனம் விழிப்படைந்து நிகழ்ச்சிகள் காட்சிகளாகத் தெரியும் ‘சொப்பன நிலை’. அடுத்தது மனதைக் கடந்த ‘ஷுஷுப்தி’ நிலை. கடைசி கட்டமும், நான்காம் கட்டமுமான ‘துரிய நிலை’. இவற்றிற்கு அடிப்படைப் புலன்கள் செயலிழப்பது. ஆன்மீக அனுபவம் உயர உயர அதைப் பெறும் ‘சமாதி’ நிலையும் உயர வேண்டும். சமாதி நிலையில் பெறுவது சமாதியிருக்கும்வரை தெரியும். சமாதியை விட்டு வெளிவந்து தியானம் கலைந்த பின் சமாதியில் கண்டது தெரியாது. ஏதோ உயர்ந்த ஒன்றைத் தொட்டது போன்ற உணர்வு விவரமில்லாமலிருக்கும். இதுவரை செய்த யோகங்களின் நிலை இது.

பூரண யோகத்தில் ‘சமாதி’ நிலை என்பதில்லை. சமாதியை unconscious stage தன்னையறியாத நிலை என்பதால் அது பூரணமாக இருக்க முடியாது என்பதால், பூரண யோகம் சமாதியை நாடவில்லை. மற்றும் பூரணயோக முறைகள் எதுவும் சாதகனை சமாதிக்கு அழைத்துச் செல்ல முடியாது. ‘சமாதி’ என்றே பகவான் ஓர் அத்தியாயம் எழுதியுள்ளார். யோகிகள் சமாதி நிலையில் புலன்களை அவித்து ஆன்ம விழிப்பால் பெறும் தெளிவை, புலன்களைத் தூய்மைப்படுத்தி, அவிக்காமல், விழிப்போடு வேலை செய்யும்பொழுது பெற்றால் அதையே நாம் சமாதி எனக் கருதலாம்

என்கிறார். சமாதி நிலையில் ஆன்மா மட்டுமே விழித்துள்ளது. புலன்களும், மனமும், உணர்வும், உடலும் தங்களை அறிய முடியாத அளவுக்கு மறந்திருக்கின்றார்கள். அதனால்தான் நிஷ்டையில் உள்ள ரிஷி மேல் செல்லு, புற்று எழுந்தாலும் அவர் அதை அறிவதில்லை. பூரண யோகத்தில் எந்தக் கரணத்தையும் அவிப்பதில்லை. மாறாக எல்லாக் கரணங்களையும் துலக்கி, தூய்மைப்படுத்துவது முறை. புலன்களும், கரணங்கள் தூய்மைப்பட்டதால் அங்கு இருளில்லை. இருள் நிறைந்த கரணம் இடையூறாக இருப்பதால் தபஸ்வி அதை அவிக்கின்றார். இருளிலில்லாத கரணம் ஒளியால் நிரப்பப்பட்ட பொழுது அதை அவிக்க வேண்டிய அவசியமில்லை. அது இடையூறாக இருக்காது. கரணங்களும் அப்படியே அவிக்கப்படுவதில்லை. துலக்கப்படுகின்றன. சமாதியில் ஆன்மா மட்டும் பெறும் ஞானத்தை பூரணயோகம் ஆன்மாவுக்கும், ஏனைய அனைத்துக் கரணங்களுக்கும் அளிக்கின்றது. அதற்கு, செயல் - கர்மம் - தேவை. செய்யும் செயல் சமர்ப்பணமானால், சமர்ப்பணம் பூர்த்தியானால், பூர்த்தியான நிலையில் எந்த வேலையும், சிறு வேலையானாலும், சமாதி யோகிக்குப் பெற்றுத் தந்த அகக்காட்சியை, திருஷ்டியை - vision - பெற்றுத் தரவல்லது. அந்நிலையை எய்தினால் அது பூரணயோக திருஷ்டியாகும். அதைத் திரிகாலத் திருஷ்டி என்பர்.

திரிகாலத் திருஷ்டி பெற காலத்தைக் கடக்க வேண்டும். Synthesis of Yoga சின்த்தஸிஸ் ஆப் யோகா எனும் யோக நூலில் கடைசி அத்தியாயத்தை பகவான் திரிகால திருஷ்டியை விவரிக்கப் பயன்படுத்துகிறார். மனித நிலையை - மனத்தை - மூன்று நிலைகளாகப் பிரிக்கின்றார். முதல் நிலை இன்று நாம் உள்ள நிலை. இது அறியாமை மனம் (mind of ignorance) என்கிறார். உலகத்து ஞானம் முழுவதும் உள்ளேயுள்ளது என அறிந்தபின், பெருமுயற்சி செய்து புறவழிச் செல்லும் பார்வையை, அகவழிச் செலுத்தி, உள்ளேயுள்ள ஞானத்தை எட்டினால் வெளியில் தேடி கிடைத்த அனைத்தும் உள்ளிருப்பதையும், தேடிக் கிடைக்காதவையும்



உள்ளிருப்பதையும் காணலாம். அதை (mind of self forgetful knowledge) தன்னை மறந்த மனம் என்கிறர். இதை எய்தியபின் திருஷ்டி திரிகாலத் திருஷ்டியாகிறது.

ஞானம் நிறைந்த மனத்தை எட்டி, திரிகாலத் திருஷ்டி பெற ஆரம்பித்தால், சமாதி நிலை விலகிப் போகும். சமாதியில் பெறும் ஞானம் நாம் செய்யும் வேலையில் எழும். அதுவே பூரண யோக திருஷ்டி எனப்படுவதாகும்.

❊ ❊ ❊

**664) பெண்மையே ஆண்மையை எல்லா இடங்களிலும் பூர்த்தி செய்கிறது. முதல் நிலையில் அவனது உடலின் அடுத்த பகுதி. பிள்ளைப்பேறு அதன் விளைவு. கடைசி நிலையில் அவள் ஈஸ்வரனான மனிதனுக்கு சக்தி.**

***பிள்ளைப் பேற்றிலிருந்து பெண்மை ஆண்மையை ஈஸ்வர சக்தியை பூர்த்தி செய்கிறது.***

வேலை பல பகுதிகளாகப் பிரிந்து, பகுதிகள் சேர்ந்து முழுமையாகி பூர்த்தியாகிறது. அவை பலவிதம். ஆண், பெண் தத்துவம் அதில் முக்கியமானது. இதையும் பல தலைப்புகளில் பிரித்து எழுதலாம்.

ஒரு மெஷினில் பல பகுதிகள் உண்டு. ஒரு கடிகாரத்தில் நூறுவிதமான பகுதிகளுள்ளன. முள், டயல், கூடு, சாவி, அலாரம் நம் கண்ணுக்குத் தெரிகின்றன. மற்றவை தெரிவதில்லை. பகுதிகள் சேர்ந்து முழுமையை ஏற்படுத்துவது வேலைக்குரிய இலக்கணம். சிருஷ்டியின் அமைப்பு.

இரவும், பகலும் எதிரெதிரானவை. அவை சேர்ந்து நாளாகின்றது. மண்ணும் மரமும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாகவும், அவசியமாகவுமிருக்கின்றன. ஒன்றில்லாமல் அடுத்ததில்லை

(complementaries). ஆணியும், மறையும் (nut and bolt) சேர்ந்து பிடித்துக் கொள்கின்றன. தனியாக ஒன்று பயன்படாது. இரண்டும் சேர்ந்து பயனை உற்பத்தி செய்யும் தன்மையுடையன. இரட்டை மாட்டு வண்டியின் ஒரு மாடு, அடுத்த மாட்டிற்கு அவசியம். வண்டியிலுள்ள ஒரு சக்கரம் அடுத்த சக்கரத்திற்கு அர்த்தம் கொடுக்கிறது. ஒன்றில்லாமல் அடுத்ததில்லை. இரு கை தட்டினால் ஓசை எழும். ஒரு கை ஓசை எழுப்பாது. வெறும் சாதத்தையோ, வெறும் சாம்பாரையோ சாப்பிட முடியாது. இரண்டும் சேர்ந்தால் சாப்பாடாகும். உலகத்தின் செயல்களை எல்லாம் பகுதிகளாகப் பிரித்தறியலாம். பலவற்றை எதிரெதிரான இரட்டையாகவும் (contraries), வேறு சிலவற்றை ஒன்றுக்கொன்று துணையான இரட்டையாகவும் (complementaries) காணலாம். சிருஷ்டியில், இயற்கையில், வளர்ச்சியில், பரிணாம வளர்ச்சியில் இவை நாம் காணும் பாங்கு.

அவற்றுள் தலையான பிரிவு ஆண், பெண் என்பது. (Positive, Negative) பாஸிட்டிவ், நெகடிவ் என்பவை எலக்ட்ரிசிட்டியின் பகுதிகள். இவ்விரு பகுதிகளின்றி மின்சாரமில்லை. ஒன்று மற்றதைப் பூர்த்தி செய்கிறது. நாம் பாஸிட்டிவ் என்பதை நெகட்டிவின் எதிரி என்று கொள்கிறோம். ஒரு பந்தயத்தில் இரு கட்சியுண்டு. அவற்றை எதிர்க் கட்சி என்கிறோம். உடன்பாடாக வேலையைப் பூர்த்தி செய்வது - மரமும், மண்ணும் - ஒரு வகை எனில், எதிர்மாறாக வேலையைப் பூர்த்தி செய்வது மற்றொரு வகையாகும்.

எல்லா இடங்களிலும் பகவான் ஸ்ரீ அரவிந்தர் புதுமைக் கருத்துக்களைக் கூறுவதுபோல் இங்கும் கூறுகிறார். நெகட்டிவ் என்பதை நாம் பாஸிட்டிவின் எதிராகக் கருதுகிறோம். முழுமையின் ஒரு பகுதியை பாஸிட்டிவ் வெளிப்படுத்துகிறது. பாஸிட்டிவ்வால் வெளிப்படுத்த முடியாத முழுமையின் அடுத்த பகுதியை நெகட்டிவ் வெளிப்படுத்துகிறது என்கிறார். நாள் என்பது முழுமையானால் பகல் ஒரு பகுதி. பகலால் வெளிப்படுத்த முடியாத நாளின் பகுதியை இரவு



வெளிப்படுத்தி, இரவும், பகலும் சேர்ந்து நாளைப் பூர்த்தி செய்கின்றன. நாம் பிறப்பை விரும்புகிறோம். இறப்பை விரும்புவதில்லை. இறப்பதால் மனிதனால் பிறக்க முடிகிறது. இறப்பு இல்லையேல், பிறப்பில்லை, முழுமையில்லை. வாழ்வு என்ற முழுமைக்குப் பிறப்பு முதற் பகுதி, இறப்பு அடுத்த பகுதி. பிறப்பும், இறப்பும் சேர்ந்தது வாழ்வு. உடல் இறந்து பிறப்பதால் life வாழ்வு உலகில் (eternal) அழியாமல் நீடிக்கிறது என்கிறார் பகவான். பூமியில் வாழ்வு நிலைபெற உடல் அழிந்து, பிறப்பதாக அவர் விளக்கம் தருகிறார்.

ஒளியையும், இருளையும் வேறு விதமாக விளக்குகிறார். வெள்ளை நிறம் தன் மீது படும் அத்தனை ஒளியையும் பிரதிபலிப்பதால், வெண்மையாகவும், கருமை தன் மீது படும் அத்தனை ஒளியையும் உள்ளே இழுத்துக் கொள்வதால் கருமையாகவுமிருக்கின்றன. எனவே வெள்ளை நிறத்தைவிட கருமையில் ஒளி அதிகம். அடர்ந்த ஒளியே இருட்டு என்று இருளை பகவான் விவரிக்கின்றார். அறியாமையை, அடர்ந்த அறிவு என்று அதேபோல் விளக்குகிறார். அறியாமை, அறிவைவிட உயர்ந்தது என்ற ஞானம், பூரண யோகத்திற்கு அடிப்படை ஞானமாகும்.

பெண் ஆணைப் பூர்த்தி செய்வது நாம் அறிவது. உடலால் பூர்த்தி செய்தால் வாரிசு உற்பத்தியாகிறது. உணர்வால் பூர்த்தி செய்தால் நட்பு எழுகிறது. மனத்தின் அறிவால் பூர்த்தி செய்தால் (original thought) புதிய சிந்தனை மேதைமை மனதிலெழுகிறது. ஆன்மாவால் பூர்த்தி செய்தால் பெண் சக்தியாகவும், ஆண் ஈஸ்வரனாகவுமாகி சிருஷ்டி ஏற்படுகிறது. பெண் ஆணை எல்லா நிலைகளிலும் பூர்த்தி செய்கிறாள். பெண்ணின்றி ஆணில்லை. ஆணின்றிப் பெண்ணில்லை. அவை இரண்டும் சேர்ந்ததே சிருஷ்டி, உலகம், வாழ்வு, பூமி, பிரபஞ்சம். வானுலகம், தகப்பனாராகவும், பூமி தாயாகவும் வர்ணிக்கப்படுகிறது.

❊ ❊ ❊

**665) தன்னை மனிதன் தயார் செய்துகொள்ளும் காலங்களில் மனிதன் பெண்ணை விலக்குவது அவசியமாகலாம். ஆனால் மனித முயற்சி அவளின்றி பூர்த்தியாக முடியாது.**

*பெண்ணில் பூர்த்தியாகும் ஆண்மை, பெண்ணை விலக்கி தயாராகும்.*

பிரம்மச்சரியம் என்பது எல்லோருக்கும் ஒரு வயதுவரை உண்டு. தவத்தை மேற்கொள்பவனுக்கு அது அவசியம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பிரம்மச்சரியம் நீடிப்பதா, தேவையில்லையா என முடிவு செய்வார்கள். தவத்தைத் தொடர்ந்து மேற்கொள்பவர்கட்கு பிரம்மச்சரியம் தவிர்க்க முடியாது. சன்னியாசி என்பவருக்குப் பெண் இல்லை. இருக்கும் பெண்ணையும் துறந்தால்தான் சன்னியாசம். மனைவியுடைய சன்னியாசி என்பவரில்லை. ரிஷி, யோகி, முனிவர் ஒரு கட்டம் பூர்த்தியானால் திருமணம் செய்து கொள்வதுண்டு. அவர்கள் சித்திக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ளும் காலத்தில் திருமணம் இல்லை, சித்தித்த பின் திருமணம் இருக்கலாம். சன்னியாசியின் போக்கில் எக்காலத்திலும் பெண் எழுவதில்லை, எழ முடியாது.

எந்தக் காரியத்திற்குத் தன்னை மனிதன் தயார் செய்து கொண்டாலும், தயார் செய்கின்ற காலத்தில் அவனுடைய முழு சக்தியும் அவனுக்குத் தேவை. அக்காலத்தில் குடும்பத்துடனோ மனைவியுடனோ தன் சக்தியைப் பகிர்ந்து கொள்ள முடியாது. பகிர்ந்து கொண்டால் மேற்கொண்ட காரியம் பூர்த்தியாகாது. தொழில், அரசியல், சேவை ஆகிய இடங்களிலும் இது உண்மை எனினும் இவர்கள் சமூகத்தின் பங்காக இருப்பதால், திருமணம் வாழ்வில் ஏற்படுகிறது. ஆண் தீவிரமாக - ஒன்றை - தொழில், சேவை - நாடும்பொழுது மனைவி இருப்பதையே மறந்துவிடுவான். அவன் நோக்கம் பூர்த்தியான பின்னரே குடும்பத்தையும், மனைவியையும் கவனிப்பான். அதன் பிறகு அது நினைவு வரும்.



தவம் அவனுடைய ஜீவனின் முழு சக்தியையும் முழுநேரம் - 24 மணியும் - தேவைப்படுவதால், தவத்தை மேற்கொண்டவன் தவம் செய்யும் காலத்தில் பெண்ணை விலக்குவது அவசியம். விலக்கியதால் தவம் பலிக்கிறது. பலித்த தவம் பூர்த்தியாக, அதன் தன்மைக்கேற்ப, மனைவி தேவை.

உதாரணமாக, தவத்தின் முதல் நிலைகளைக் கடந்து உச்சகட்டம் எய்தியவர் மனோமயப் புருஷனை அடைகிறார். ஜீவாத்மாவை அடைகிறார், மேலும் ஈஸ்வரனாக அவருக்கு சித்தி கிடைப்பது உச்சகட்டம், அரியபொருள், எனினும் அதை அடைபவருண்டு. ஈஸ்வர சித்தியடைந்தவர் தம் தவப்பலனை மற்றவர்க்களிக்க, உலகுக்குப் பயன்படுத்த, நேரடியாக முயன்றால் முடியாது. அதைச் சாதிக்க ஒரு சக்தி தேவை. பார்லிமெண்ட் தீட்டும் திட்டங்களை பார்லிமெண்ட் நேரடியாக அமுல்படுத்த முடியாது. அதற்கு ஒரு சர்க்கார் தேவை. சர்க்காரின்றி வெறும் பார்லிமெண்ட் மக்களுக்குத் தங்களுக்குள்ள அதிகாரத்தால் நல்லது செய்யமுடியாது. அதுபோல் ஈஸ்வரன் நிலை சித்தித்த பின், சக்தியின்றி சிஷ்யர்களையோ, உலகையோ அவர் எட்டித் தொட முடியாது. இந்நிலையை எய்தும்வரை பெண் விலக்கப்பட வேண்டும். எய்தியபின் பெண்ணின்றி காரியம் பூர்த்தியாகாது.

ஆரம்பக் காலத்தில் அன்னையின் தெய்வீகத்தைச் சாதகர்கள் காணவில்லை. தங்களைப்போல் அவரும் சீடர் என்றிருந்தனர். பகவான் அன்னையின் தெய்வீகத்தை விளக்கியபின்னும் சிலரால் அன்னையை ஏற்க முடியவில்லை. என் யோகப் பலன் உங்களை வந்தடைய நீங்கள் அன்னையை ஏற்க வேண்டும். அன்னையை ஏற்காமல் அது உங்களை வந்தடையாது. அன்னையை ஏற்க முடியாதவர்கள் ஆசிரமத்தை விட்டுப் போகலாம் என்றார். அதுபோன்ற பலர் அன்னையைச் சந்திக்கும்பொழுது அன்னைக்கு நமஸ்காரம் செய்வதுமில்லை.

சாதகர்கள் பலர் பகவானுக்கு ஒரு பெண்ணைப் பற்றியும் அவள் ஆன்மீக உயர்வைப் பற்றியும் எழுதினால் இது என்ன திருமணத்திற்கு விண்ணப்பமா? என்பார். அது போன்ற ஒருவருக்கு எழுதும்பொழுது, பகவான், “யோகம் சித்தித்து புருஷனை அடைந்தால், ஈஸ்வரன் சித்தித்தால் அந்நிலைக்கு சக்தி தேவை. அதற்கு முன் நிலைகளுக்கு ‘சக்தி’ வாழ்வில் எழுந்தால் யோக சக்தி சிதறி, யோகம் பாழாகும்” என்று எழுதினார்.

*தொடரும்...*

❉ ❉ ❉

**ஜீவிய மணி**

பகுத்தறிவே அகந்தை.



# இம்மாதச் செய்தி

இறைவன் மனித உருவம் தாங்கி வருவது அவதாரம். அவதாரம் அன்புருவம் ஏற்று பக்தனில் வெளிப்படுவது இறைவனின் அவதார நோக்கம் உலகில் பூர்த்தியாவதால் அவதார இலட்சியத்தை அன்பால் வெளிப்படுத்தும் பக்தன், அவதாரத்தைவிட உயர்ந்தவனாகிறான். இறைவனைவிட அவதாரம் உயர்ந்தது. அவதாரத்தைவிட அதன் இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும் பக்தன் சிறந்தவனாகிறான். பரம்பொருளின் அடுத்த உயர்ந்த நிலை சிருஷ்டி என்பதைப்போல் அவதாரம், பரம்பொருளை விட உயர்ந்தும், இலட்சிய பக்தனின் சரணாகதி பூர்த்தியாகும் நிலையில் அவன் அவதாரத்தை விட உயர்ந்தும் இருக்கின்றான். பகவான் ஸ்ரீ அரவிந்தர் “அன்னைக்குத் தம்மைப் பூரணமாகச் சரணம் செய்வதையே இந்த அவதார இலட்சியமாகக் கொண்டிருந்தார்” என அன்னை சொல்கிறார்.

❉ ❉ ❉

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

*Page. No. 81*
*Para No. 3*

**We are aware of forms of Matter.**
**All of them are physical.**
**Even the most subtle is physical.**
**All of them are built by their combinations.**
**The five elements so combine.**
**Our experience is sensible.**
**It depends upon them.**
**We receive the vibration.**
**This is sense of sound.**
**This is a world of vibrations.**
**These are vibrations of Force.**
**The sense of touch arises by contact of things.**
**Next is the sense of sight.**
**It is sustained by the force of light, fire and heat.**
**It is by the action of light.**
**Light outlines and hatches forms.**
**There is a fourth element.**
**It is the sense of taste.**
**The fifth is the sense of smell.**
**All these are essentially responses.**
**They are responses to vibratory contacts.**
**The contacts are between force and force.**



## 10. சித் - சக்தி

**ஜடத்தின் உருவங்களை நாம் அறிவோம்.**
**அவை அனைத்தும் தொடு உணர்ச்சிக்குரியவை.**
**மிக சூட்சுமமானதிலும் ஜடத் தன்மையிருக்கும்.**
**அவை பூதங்களின் கலப்பால் உருவாகின்றன.**
**பஞ்சபூதங்கள் அப்படி உருவாயின.**
**நம் அனுபவம் உணர்வாலானவை.**
**இவ்வனுபவங்கள் அவற்றை நம்பியுள்ளன.**
**நாம் அதிர்வைப் பெறுகிறோம்.**
**இது சப்தமாகும்.**
**இவ்வுலகம் அதிர்வுகளாலானது.**
**அவை சக்தியின் அதிர்வுகள், கதிர்கள் எனலாம்.**
**பொருள்கள் ஒன்றையொன்று தொடுவதால் தொடு உணர்வு வருகிறது.**
**அடுத்தது பார்வை.**
**ஒளி, நெருப்பு, சூடு ஆகியவற்றால் பார்வை உண்டாயிற்று.**
**இது ஒளியின் செயல்.**
**ஒளி வரைந்து ரூபங்களை உற்பத்தி செய்கிறது.**
**4ஆம் பூதம் உண்டு.**
**அது ருசி.**
**ஐந்தாம் உணர்வு நுகர்வு, வாசனை.**
**இவையெல்லாம் அடிப்படையில் எதிரொலிகளாகும்.**
**அதிர்வுகளின் தொடர்புக்கு எழும் எதிரொலிகள் இவை.**
**சக்தி சக்தியைத் தீண்டுவதால் ஏற்படும் தொடர்பு இது.**

**The human mind wants to understand.**
**It tries to understand forms.**
**These forms are real to its senses.**
**They are solid and durable.**
**In truth they are only temporary phenomena.**
**It is like pure energy.**
**To the senses they are non-existent.**
**Also intangible and incredible.**
**Man wonders about them.**
**How can they be one permanent cosmic reality?**
**There is a gulf between Force and its modifications.**
**The Force is pure.**
**Modifications go through several stages.**
**The ancient thinkers bridged that gap.**
**Thus they satisfied themselves.**
**The ordinary human mind does not understand this gap.**
**It is prevented from understanding the gap.**

***Page No. 81***
***Para No. 4***

**There is the problems of consciousness.**
**Our theory does not solve it.**
**Vibrations of Force come into contact.**
**This gives rise to consciousness.**
**They are conscious sensations.**
**It is not explained how.**
**The Sankhyas were analytical thinkers.**
**They saw behind the five elements two things.**
**They were Mahat and Ahankara.**
**They were non-material principles.**
**Mahat is Force.**
**It is the vast cosmic principle of Force.**



மனித மனம் புரிய முயல்கிறது.
அது ரூபங்களை அறிய முயல்கிறது.
இந்த ரூபங்களைப் புலன்கள் அறியும்.
அவை திடமானவை, நாட்பட்டு வருபவை,
உண்மையில் அவை எழுந்து மறையும் இயல்புடையவை.
சுத்த சக்தி போன்றது உணர்வுகள்.
அவை புலன்கட்குப் புலப்படாதவை.
கைக்கோ, மனத்திற்கோ தட்டுப்படாதது.
மனிதனுக்கு அவை ஆச்சர்யம் தருபவை.
பிரபஞ்சத்தில் எப்படி இவை நிலையாக இருக்க முடியும்?
சக்திக்கும் அதன் முடிவான உருவத்திற்கும் இடையே வெளியுண்டு.
சக்தி சுத்தமானது.
மாறும் உருவம் பல நிலைகளைக் கடந்து செல்லும்.
வேத காலத்து ஆராய்ச்சியாளர்கள் இடைவெளியைச் சரிப்படுத்தினர்.
அது அவர்கட்குத் திருப்தி அளித்தது.
எளிய மனிதன் இவ்விடைவெளியை அறியமாட்டான்.
இடைவெளியை அவன் அறியத் தடையுண்டு.

சித் (ஜீவியம்) இருக்கிறது.
நாம் அதை விளக்கவில்லை.
சக்தியின் அதிர்வுகள் தொடர்பு கொள்கின்றன.
அதன் ஜீவியம் இதன் மூலம் எழுகிறது.
அவை ஜீவனுள்ள உணர்வுகள்.
எப்படி எனத் தெரியவில்லை.
சாங்கியம் என்பது ஆராய்ச்சி.
பஞ்ச பூதங்களின் பின்னால் இரண்டைக் கண்டனர்.
அவை மகத், அகங்காரம்.
அவை ஜடமான தத்துவங்களில்லை.
மகத் என்றால் சக்தி.
பிரபஞ்சம் முழுவதும் பரவிய சக்தி அது.

**The other is Ego.**
**It is a formation.**
**It is a divisional principle.**
**There is one more principle.**
**It is intelligence.**
**They all three become active in consciousness.**
**It is not by virtue of Force itself.**
**But it is by virtue of Conscious-Soul.**
**Conscious-Soul is inactive.**
**These principles are reflected in it.**
**That reflection changes these principles.**
**That change is the hue of consciousness.**

***contd...***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இன்னல்களைக் கடந்து, சவாலை ஏற்று வாழ்வில் முன்னேறுவது வாழ்வில் இன்பம். தனக்கே சவால் எழுப்பினால் அதைவிடப் பெரிய இன்பம் காத்திருக்கிறது. ஆன்மா, அளவு கடந்த இன்பத்தைத் தேடி, தன்னை அறியாமையிலிருந்து மீண்டும் கண்டுபிடிக்க முயல்கிறது. அதுவே துணை.

*உலகிலில்லாத இன்பத்தை நாடுவது லீலை.*



**அடுத்தது அகந்தை.**
**அது ஓர் உருவம் அல்லது உருவகம்.**
**இது பிரிக்கும் தத்துவம்.**
**மேலும் ஓர் தத்துவம் உண்டு.**
**அது புத்தி.**
**இம்மூன்றாம் ஜீவியத்தில் (சித்தில்) செயல்படுகின்றன.**
**இவை சக்தியால் செயல்படவில்லை.**
**இவை ஆத்மாவால் செயல்படுகின்றன.**
**ஆத்மா சலனமற்றது.**
**இம்மூன்று தத்துவங்களும் ஆத்மாவில் பிரதிபலிக்கின்றன.**
**பிரதிபலிப்பு தத்துவங்களை மாற்றுகிறது.**
**அம்மாற்றம் ஜீவியம் எனப்படும்.**

***தொடரும்...***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இடைவிடாத அழைப்பு முடிவு. அதன் முன் படிகளான முன்னிலைகள் : அழைப்புக்குள்ள திறமை, அழைக்க விருப்பம், ஆன்மா பரமனை அறிதல், முடிவாக இறைவனின் “அழைப்பு” அவனிதயத்தை எட்டியது.

*இறைவனை எட்டுவது அழைப்பு.*

## P. 19. A colonist from immortality.

### சொர்க்கத்திலிருந்து இங்குக் குடியேறியவர்

அவதார புருஷர்களை, அற்புதமான மனிதர்களை நாம் தெய்வப்பிறவி என்கிறோம். வானுலகில் பிறந்து மண்ணுலகில் வாழ்பவர்கள் என்ற விளக்கம் நெடுநாளாகப் பயன்படுவது. ஸ்ரீ அரவிந்தர் அந்த உபமானத்தை சாவித்திரியில் பயன்படுத்துகிறார். வேறோரிடத்தில் சாவித்திரியில் கூறுகிறார். “தெய்வலோகத்தில் ஏராளமான ஜீவன்கள் புவியில் பிறக்க விழைகிறார்கள். அதற்குரிய கருவைத் தாய் வயிற்றில் கண்டால் கரு மூன்று மாதமான பின் அதனுள் இத்தெய்வப்பிறவிகள் நுழைய விரும்புகிறார்கள்”. கருவடைந்த பெண்கள் மனம் தெய்வ சிந்தனையால் நிரம்பி, இனித்து பக்குவப்படுவதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தெய்வலோகத்திலுள்ளவர்கள் அங்கேயே இருக்கலாம். இறைவனை அவர்களால் அடைய முடியாது. இறைவனையடைய அவர்கள் விரும்பினால் அவர்கள் புவியில் மனிதர்களாகப் பிறக்க வேண்டும்.

- **உலகை உய்விக்க தெய்வம் புவிக்கு வருகிறது என்பது நாமறிந்தது.**
- **இறைவனை அடைய தெய்வம் பூமியில் மனிதனாய்ப் பிறக்கிறது என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

இப்பக்கத்திலுள்ள இதர கருத்துகளில் சில.

- உலகத்தின் ஆசையால் உந்தப்பட்டு அவள் பிறந்தாள்.
- நினைவுக்கெட்டாத நாளிலிருந்து தேடுவதில் முன்னணியில் உள்ளவள்.
- புரியாத புதிரான நாடகத்தின் முதன்மையான பாத்திரம்.



- உருவமற்றவன் உருவத்தால் தன்னையே தேடுகிறான்.
- குருட்டு சூன்யம் வாழ முயன்று, கண் திறந்து பார்க்க முயல்கிறது.
- இலட்சிய வெளியின் சிந்தனையாளரின் உழைப்பு.
- பூமியின் ஊமைக் கனவிற்கு ஜோதிமயமான ஆற்றல் வருகிறது.
- பெருவெளியினின்று இறங்கி வந்த பெரிய ஆத்மா.
- க்ஷணத்தில் மறையும் சாம்ராஜ்யம்.
- பூமாதேவியின் புலப்படாத பாதைகளில் சுடர்விளக்கான ஒளி.
- அவனுடைய பிறப்பு ஆண்டவனின் சகுனம்.
- மனித உடல் ஒளி ஊடுருவும் ஆடையலங்காரம்.
- குருட்டு உலகை நடத்தும் பரமனை மூடி மறைப்பது.
- பிரபஞ்சத்தின் காலமும், இடமும் அணைத்து ஆதரிப்பன.
- இறைவன் பட்ட கடனை மனிதனுக்கும் பூமாதேவிக்கும் தீர்ப்பவன்.
- தெய்வீக உரிமையான பெரிய பிதிரார்ஜிதம்.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தோல்வியின் காரணத்தைத் தன்னிடம் காண்பது, பூரணயோகம். ஒரு செயலில் பலர் கலந்திருப்பதால், காரணத்தை மற்றவர் மீது சுமத்துவது எளிது.

*வெற்றிக்கு இறைவனும், தோல்விக்கு நாமும் காரணம்.*

## P. 13. The unknown is not unknowable.

### இன்று அறியாதது, என்றும் அறிய முடியாததில்லை

ஒரு காலத்தில் அன்று அறிந்ததே முடிவு, அதிகமாக அறிய முயல்வது தவறு என்ற கருத்து இருந்தது. அத்துடன் இனி அறிய ஏதுமில்லை என்ற அபிப்பிராயமும் பலமாக இருந்தது. பழைய மதங்கள் அப்படியிருந்தன. இன்றும் அம்மதங்களில் fundamentalists என்பவர்களைப் பார்த்துப் பேசினால் Bibleஇல் அது இல்லை, மேற்கொண்டு பேசவேண்டாம். கீதை கூறுகிறது, அதைத் தாண்டிய ஞானமில்லை. கொரான் கூறுவதை மறுத்துப் பேசாதே என்ற மனப்பான்மையைக் காணலாம். சுமார் 50 வயது, 60 வயதானவர்கள் கிராமத்தில் செல்வாக்கோடிருந்தால், பேராசிரியர் புகழ் பெற்றவரானால், கட்சித் தலைவர் பிரபலமானவரானால் முடிவான ஞானத்தைக் கண்டுவிட்டோம் இனி பேச எதுவுமில்லை என்ற மனநிலையைக் காணலாம். இன்று உலகம் மாறுவதால் மனநிலை சற்று இடம் கொடுக்கிறது. தங்கள் அறிவின் உச்சத்தை intellectual maximum எட்டியதாலும், தங்கள் அறிவைக் கடந்து எதுவுமில்லை என்ற ஆழ்ந்த அனுபவப்பூர்வமான தெளிவு இருப்பதாலும் அவர்கட்கு இனிமேல் அறிய எதுவுமில்லை என்று தோன்றுகிறது.

எந்தக் காலத்திலும் உயர்ந்த தீர்க்க தரிசனமுள்ளவர்கள் கற்றது கைம்மண் அளவு எனக் கருதியுள்ளார்கள். ஸ்ரீ அரவிந்தம் கூறுவது,

- **இதை - இனி அறிய எதுவுமில்லை - கூறுபவர்கள் மனநிலை மனவளர்ச்சியில் ஒரு கட்டம். அதை முடிவாக ஏற்கவேண்டும் என்ற கட்டாயமில்லை.**
- **பிரம்மம் அனந்தமானது infinite. அனந்தம் எனில் அது புனைவதும் அனந்தமானது.**



- **அதனால் மேலும் மேலும் முடிவில்லாமல் சிருஷ்டியிலும், நம் வாழ்விலும் உற்பத்தி செய்யக் கூடியவையுண்டு.**
- **பிரபஞ்சத்தில் அறியக் கூடியது ஒன்றிருந்தால் மனிதனிடம் அதை அறியும் திறமையிருக்கும்.**
- **மனம் பகுதியானதால், அதன் திறனுக்கு முடிவுண்டு.**
- **சத்திய ஜீவியம் முழுமையானதால், அதன் திறனுக்கு முடிவில்லை.**
- **கடந்த நூற்றாண்டுகளில் இதை நினைத்தவர்களை இன்று நாம் நினைத்துப் பார்த்தால், அவர்கட்கு இக்கூற்று பொய் எனத் தெரியும்.**
- **அவர்கட்கு அன்று இது பொய் என்பதுபோல், நமக்கும் இன்று இது உண்மையன்று எனத் தெரியும்.**
- **கீதை நாம் ஆச்ரயிப்பதை அடையலாம் என்பதால், தெரிய முனைந்தால் நாம் தெரிந்து கொள்ளலாம்.**

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரார்த்தனை, பெரும்பலனளிக்கும் சுருக்கமான வழி, தன் பலஹீனத்தைக் கண்டு களைதல் அல்லது தன் வலிமையைச் சற்று உயர்த்துதல்.

*நம்மை வலுப்படுத்தினால் பிரார்த்தனை வலுக்கும்.*

# நான்கு கட்டுப்பாடுகளும், நான்கு விடுதலைகளும்

(பாகம் - II)

*N. அசோகன்*

இப்பொழுது நாம் அறிவுக் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்வோம். மானசீகக் கட்டுப்பாடு என்று சொல்லும்பொழுது நீண்ட நேரம் தியானம் செய்து அதன் விளைவாக எண்ணங்களைக் கட்டுப்படுத்தி மௌனத்தை அடைகின்றதுதான் நமக்கு நினைவிற்கு வருகிறது. ஆனால் இது நமக்குத் தெரிந்த விஷயம். அதே சமயத்தில் அறிவு கட்டுப்பாட்டிற்கு இன்னொரு பக்கம் இருக்கிறது. தியானத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை நாம் இந்த இன்னொரு பக்கத்திற்குக் கொடுப்பதில்லை. இந்த இன்னொரு பக்கம் என்பது பேச்சுக் கட்டுப்பாடு. பொதுவாகப் பேச்சைக் குறைப்பது என்றால் பூரண மௌனத்திற்குப் போய்விடுவார்கள். ஆனால் உண்மையில் பூரண மௌனத்தைவிட அளவான பேச்சு என்ற கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதுதான் உண்மையில் சிரமமான காரியம். சிரமமாக இருந்தாலும் அதற்கேற்ற பலனையும் நாம் பார்க்கலாம்.

படைப்பில் முதன்முதலாகப் பேச்சைக் கையாள்கின்ற ஜீவராசி மனிதன்தான். தன்னுடைய இந்த விசேஷத் திறமை பற்றி மனிதனுக்குத் தற்பெருமையும் உண்டு. இந்தப் பெருமையின் காரணமாகவே மனிதனும் இந்த விசேஷத் திறமையை விவேகம் இல்லாமலும், ஒரு வரையறை இல்லாமலும் பயன்படுத்துகிறான். தேவையில்லாத பேச்சு இப்படி அதிகரிக்கும்போது இதற்கு எதிர்மாறாக இருக்கின்ற இந்தத் தாவர இனங்களின் அமைதியை நாம் இழந்துவிட்டோமே என்று ஒரு பக்கம் வருத்தமாகவும் இருக்கிறது.

அறிவிற்கும், பேச்சிற்கும் உள்ள தொடர்பை நாம் கூர்ந்து கவனித்தால் எந்த அளவிற்கு அறிவு வளர்ச்சி குறைந்து இருக்கிறதோ அந்த அளவிற்குப் பேச்சு அதிகரிக்கிறது என்பதைப்



பார்க்கலாம். படிப்பறிவு இல்லாத மக்களைக் கவனித்தால் அன்னை சொல்வதினுடைய உண்மை தெரியவரும். அதாவது எழுத்தறிவு இல்லாதவர்களுக்குக் காதால் கேட்டுக் கொள்கின்ற விஷயங்களைத் திரும்பி வாயால் சொல்லிக் கொண்டால்தான் அவர்களுக்கு மனதில் படும். படிக்காத வேலைக்காரியிடம் எஜமானி அம்மா, கடைக்குப் போய் ஒரு கிலோ சர்க்கரை, ஒரு டஜன் முட்டை, அரை டஜன் வாழைப்பழம் வாங்கிக் கொண்டு வா, அப்படியே திரும்பி வருகிற வழியில் பேப்பர் கடைக்குச் சென்று குமுதம் வாங்கி வா, குமுதம் இல்லை என்றால் தேவி வாங்கி வா என்று சொன்னால் இதை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டு கடைக்குப் போக மாட்டார்கள். படித்த பெண்ணாக இருந்தால் சீட்டில் எழுதி வைத்துக் கொண்டு உடனே கிளம்பிவிடுவாள். படிக்காத பெண்ணாக இருந்தால் எஜமானி அம்மா சொன்னதை தானே வாய்விட்டு தனக்குச் சொல்லிக் கொள்வாள். அதாவது வாய்விட்டு பேசும்போதுதான் அவர்களுக்குச் சிந்திக்கவே முடிகிறது. எண்ணமே உருவாகிறது. இல்லாவிட்டால் அவர்களுக்கு எண்ணமோ, சிந்தனையோ உருவாவதில்லை.

படித்தவர்களை எடுத்துக் கொண்டால்கூட ஒரு கருத்தை அவர்கள் படித்துத் தெரிந்து கொள்ளும்போது அப்படியே அவர்களுக்குப் புரிந்துவிடும் என்று சொல்ல முடியாது. தான் படித்த விஷயத்தை மற்றவர்களிடம் விளக்கிப் பேசினால்தான் அவர்கள் படித்தது அவர்களுக்கே தெளிவாகப் புரியும். நாலாவது தடவைதான் அவர்களுக்கே புரிகிறது என்னும்போது முதல், இரண்டு, மூன்று தடவைகள் அவர்கள் பேச்சே ஒரு வரையறை இல்லாமல் தெளிவில்லாமல் இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு அறிவில் தெளிவு பிறக்க வேண்டும் என்றால் கேள்விப்பட்டதைப் பல தடவைகள் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது என்றாகிறது. இந்நிலை அறிவு வளர்ச்சி சராசரி நிலையில் இருக்கிறதைக் காட்டுகிறது.

இப்படிப்பட்டவர்களைத் திடீரென்று மேடைக்கு அழைத்து, பேசும்படிச் சொன்னால் சரளமாகப் பேசமுடியாது. முன்னேற்பாடுகள் செய்து கொள்ள இவர்களுக்குக் கால அவகாசம் வேண்டும்.

அப்பொழுதுதான் எதைப் பேசுவது, எப்படிப் பேசுவது, எந்த அளவிற்குப் பேசுவது என்றெல்லாம் அவர்களால் நினைத்துப் பார்த்துத் தயார் செய்து கொள்ள முடியும். இவர்களுக்கு அடுத்த உயர்ந்த நிலையில் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அதாவது பேச்சு வன்மை உச்சகட்டத்தில் இருப்பதால் திடீரென்று அழைத்துப் பேசச் சொன்னாலும் சரளமாகப் பேசுவார்கள்.

ஆனால் பேச்சுக் கட்டுப்பாடு என்று எடுத்துக் கொண்டால் சிறந்த பேச்சாளருடைய பேச்சுகூட அனாவசியப் பேச்சு என்றாகிவிடலாம். அன்னையின் கண்ணோட்டாத்தில் தேவையில்லாத பேச்சு எதுவாக இருந்தாலும் அது அனாவசியப் பேச்சுதான். எது அவசியப் பேச்சு, எது அனாவசியப் பேச்சு என்று நிர்ணயிக்க வேண்டும் என்றால் முதலில் எத்தனை வகையான பேச்சு இருக்கிறது என்று பார்க்கவேண்டும்.

முதல் வகைப் பேச்சு நம்முடைய அன்றாடக் குடும்ப வாழ்க்கை மற்றும் வேலை விஷயமாக மற்றவர்களுடன் நாம் பேசும் பேச்சு. இவ்வகைப் பேச்சுதான் நமக்கு அதிகபட்சமாக இருக்கிறது. அதே சமயத்தில் உபயோககரமாகவும் இருக்கிறது. இந்தப் பேச்சையே எடுத்துக் கொண்டால்கூட நிறைய பேசித்தான் வேலை செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை என்பதை நாம் கவனித்தால் புரிந்து கொள்ளலாம். அதாவது பேச்சைக் குறைந்தபட்சத்திற்குக் கொண்டு வந்தால் இதே அளவு வேலை இன்னும் விரைவாக நடந்து முடிகிறது என்பதைப் பார்க்கலாம். அதாவது பேச்சு குறைந்து அமைதியும் concentration-உம் அதிகரிக்கும்பொழுது வேலை விரைவு பெறுகிறது என்பதைப் பார்க்கலாம்.

ஒரு குடும்பத்தில் ஒருவராக நாம் வாழ்கிறோம் என்றால், அவரவர்களுடைய அன்றாடச் செயல்களில் ஒரு ரெகுலாரிட்டி இருக்கும். அப்பட்சத்தில் ஆட்டமேட்டிக்காக நடக்கின்ற விஷயங்களை நாம் தினமும் பேச வேண்டிய அவசியம் இல்லை. காலையில்



எழுந்தவுடன் குடும்பத் தலைவருக்கு டீ, காப்பி சர்வ் பண்ணுவது, பின்னர் காலை டிபன் கொடுப்பது என்பது அந்த வீட்டுத் தலைவி தானாகவே செய்வது. ஆகவே காபி வேண்டும், டிபன் வேண்டும் என்று இவர் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. மாலையில் அவரவர் வீடு திரும்பும்பொழுது இன்று அலுவலகத்தில் என்ன நடந்தது, பள்ளியில் என்ன நடந்தது என்றும், வீட்டில் என்ன நடந்தது என்றும் பரிமாறிக் கொள்ளும் பழக்கம் ரெகுலராக இருக்கிறது என்றால் அதைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவரவர்களே தாமாகச் சொல்வார்கள். சொல்லாமல் மௌனமாக இருக்கிறார்கள் என்றால் அதை நாம் கவனித்து, ஏனின்று மௌனமாக இருக்கிறீர்கள்? office-இல் என்ன நடந்தது என்று சொல்லக் கூடாதா? என்று கேட்கலாம். மற்றபடி எல்லாம் ரெகுலராக போய்க் கொண்டு இருந்தால் வழக்கமான கேள்விகள் தேவையே இல்லை.

அடுத்ததாக நமக்குத் தெரிந்தவர்களுடன் நாம் சோஷியலாக உறவாடுகிறோம். நண்பர்களைச் சந்தித்துப் பேசுவது, உறவினர்களைப் பார்க்கப் போவது, மற்றும் சோஷியல் function-க்குப் போவது என்பது எல்லாம் இதில் அடங்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நம்முடைய பேச்சு என்பது நம்முடைய feelings-ஐ வெளிப்படுத்துவதாக அமைகிறது. இங்கேயும் பேச்சுக் கட்டுப்பாடு என்பது மிகவும் உதவியாக இருக்கும் என்று அன்னை சொல்கிறார். நம் பேச்சுக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்பொழுது நமக்குள் ஓர் உணர்ச்சி பொங்கி எழுந்தால், இந்த உணர்ச்சியை வெளிப்படுத்தலாமா? வேண்டாமா? என்று சிந்திக்க நமக்கு அவகாசம் கிடைக்கும். இந்த அவகாசத்தை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொண்டால் எத்தனையோ தேவையில்லாத தகராறுகளையும், சண்டைகளையும் நாம் தவிர்க்கலாம். நம்மைப் பற்றி உதாரணமாக நமக்கு நெருங்கிய நண்பரே தவறாகப் பேசுகிறார் என்ற தகவல் நமக்குக் கிடைக்கிறது. உடனே நமக்குக் கோபம் பொங்கி எழுகிறது. அவரைப் பார்த்தவுடன் எப்படி இப்படி நீங்கள் பேசலாம் என்று கேட்டுவிட மனம் துடிக்கிறது.

உடனே போனை எடுத்து நம்பரை டயல் செய்து நண்பரை வசை பாடுவது என்பது ஒரு சாதாரணச் செயல். ஆனால் பேச்சுக் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டு இருப்பவர் இதைச் செய்வது சரியாகாது, மாறாகக் கோபம் பொங்கி எழுந்தாலும் பரவாயில்லை, இந்தக் கோபத்திலிருந்து முதலில் விடுபட்டு அன்பர் மன அமைதிக்கு வரவேண்டும். பின்னர் நிதானமாக மூன்றாவது நபர் கொடுத்த தகவல் உண்மையாக இருக்குமா? நண்பர் அப்படிப்பட்டவர்தானா? அல்லது மூன்றாவது மனிதர் விஷமியா? இருவரையும் பிரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் சொல்லி இருக்கிறாரா என்றெல்லாம் சிந்திக்க வேண்டும். சொன்னவர் விஷமி என்றால் நண்பர்மேல் உள்ள நம்பிக்கையை மதித்து அவரிடம் நம் கோபத்தை காட்டாமல் விஷமியிடம் இருந்து நாம் விலக வேண்டும். சொன்னவர் நம்மிடம் நல்லெண்ணம் கொண்டவர்தான், நாம்தான் நண்பரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று தெரிந்தால் நண்பரிடம் இருந்து விலகுவது என்று முடிவு செய்துவிட்டு அமைதியாக இருக்கவேண்டும். ஆக எப்படிப் போனாலும் **அன்னை நம்மிடம் எதிர்பார்ப்பது அமைதியான செயல்பாடே தவிர உணர்ச்சிகளை வார்த்தைகளால் கொட்டி ஆவேசப்படுவது இல்லை.** ஆக அன்னை என்ன சொல்ல வருகிறார் என்றால் கோபம், எரிச்சல், பொறாமை, வன்முறை, கிண்டல், கேலி, ஆபாசம் போன்ற நெகடிவ்வான உணர்வுகள் எவையுமே நம்முடைய பேச்சில் வெளிப்படக் கூடாது என்கிறார். இதனால் வருகின்ற தகராறு மட்டும் தவறு என்றில்லை, நம்முடைய பேச்சால் இந்த உணர்வுகளுக்கு ஒரு வெளிப்பாடு கிடைக்கும்பொழுது அடுத்தவர்கள் மனநிலையும் தெரிகிறது. அதன் விளைவாகச் சூழலும் கெடுகிறது. சூழல் கெடுவதற்கு நாம் காரணமாக ஒரு பொழுதும் இருக்கக்கூடாது.

அனாவசியப் பேச்சு என்று எடுத்துக் கொள்ளும்பொழுது அடுத்தவர்களை நாம் விமர்சனம் செய்யும் எந்த பேச்சையும் நாம் இங்குக் கருத வேண்டும். நம்முடைய பொறுப்பில் இருக்கின்றவர்களைப் பற்றித்தான் பேச நமக்கு உரிமை இருக்கிறதே தவிர நம்முடைய



பொறுப்பில் இல்லாதவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பற்றி விமர்சனம் செய்ய நமக்கு உரிமையில்லை. நம் வீட்டுப் பையன் சரியாகப் படிக்காமல் வீணாகப் பொழுதைக் கழிக்கிறான் என்றால் அவனைக் கண்டித்துப் பேச நமக்கு உரிமை இருக்கிறது. அதே சமயத்தில் பக்கத்து வீட்டுப் பையன் படிக்காமல் ஊர் சுற்றுகிறான் என்றால் நம் வீட்டில் அமர்ந்துகொண்டு அவனைக் கிண்டல் செய்து பேசுவது நமக்கு சரியில்லை. அவனைக் கண்டிப்பது அவன் தகப்பனாரின் பொறுப்பு. நம்முடைய கிண்டல் அவனுக்கும் உதவாது, அதே சமயத்தில் நம்முடைய பேச்சு கட்டுப்பாட்டை இழக்கிறது என்பதால் இந்தக் கிண்டல் நம் consciousness லெவலையும் இறக்குகிறது.

நாம் ஓர் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டு இருக்கிறோம் என்றால் நம்முடைய வேலையே எங்கே என்ன வேலை நடக்கிறது என்று ரிப்போர்ட் செய்யக்கூடிய வேலையாக இருக்கலாம். இப்படிப்பட்ட பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டால் அதை நாம் மிக ஜாக்கிரதையாக நிறைவேற்ற வேண்டும். அதாவது நம்முடைய ரிப்போர்ட் வேலையை ஒட்டித்தான் இருக்கவேண்டுமே தவிர பர்சனல் விஷயங்கள் எல்லாம் அதில் வரக்கூடாது. இரண்டாவதாக ரிப்போர்ட் என்பது பாரபட்சமின்றி ஒரு நடுநிலைமையை வெளிப்படுத்தும் ஒன்றாக அமைய வேண்டும். அதாவது நம்முடைய விருப்பு வெறுப்புகள், தனிப்பட்ட அபிப்பிராயங்கள் அதில் தலையிடக்கூடாது. நம்முடைய இன்ஸ்பெக்ஷனுக்கு ஆளாகி இருக்கின்ற ஒருவர் வேலையைப் பொறுத்தவரை சிறப்பாகச் செய்பவராக இருக்கலாம். ஆனால் அவரிடம் நமக்கு வேண்டியவருக்கு வேலை போட்டுத் தரும்படிச் சொல்ல அவரை அணுகியபோது அவர் அதை மறுத்திருக்கலாம். இதன் காரணமாக நமக்கு வந்த பொறுப்பை வைத்து அவர் டிபார்ட்மெண்டில் வேலை சரியாக நடக்கவில்லை என்று நாம் எழுதுவது சரியில்லை. இறுதியில் பொதுவாக என்ன சொல்லலாம் என்றால் அடுத்தவரைப் பற்றி நாம் பேசுவதை எந்த

அளவிற்குக் குறைத்துக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு அது நல்லது என்றாகிறது. அதாவது எவரைப் பற்றியும் முடிவான அபிப்பிராயத்தை அடித்துச் சொல்வது சரியில்லை என்று அன்னை கூறுகிறார்.

நாம் பேசுகின்ற வார்த்தைகளுக்கு ஒரு சூட்சும சக்தி இருக்கிறது என்று அன்னை சொல்கிறார். இதன் காரணமாக நாம் என்ன பேசுகின்றோமோ அது நிஜமாகக்கூடிய வாய்ப்புகள் உருவாகின்றன என்று கூறுகிறார். இதனால் அடுத்தவரைப் பற்றி நாம் தவறாகப் பேசினால் அது பலிக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. இத்தகைய அபாயங்களுக்கு நாம் இடம் கொடுக்கவே கூடாது என்கிறார். அடுத்தவர்களிடம் நாம் காண்கின்ற குறைகளைத் திருத்தக் கூடிய சக்தி நமக்கு இருந்தது என்றால் அப்பொழுது மட்டும் நாம் அவர்களைப் பகிங்கரமாகக் கண்டிக்கலாம் என்கிறார். நம்முடன் வேலை செய்பவருக்கு பங்சுவாலிட்டி இல்லை என்று வைத்துக் கொள்வோம். அவரை நம்மால் திருத்த முடியும் என்றால் அவரை நாம் கண்டிக்கலாம். அடுத்தவரைத் திருத்துகின்ற சக்தி எப்பொழுது நமக்குப் பிறக்கிறது என்று கேட்டால் நம்முடைய பர்சனாலிட்டி உண்மை நிரம்பியதாகவும், நம்முடைய ஜீவிய நிலை சத்திய ஜீவிய நிலைக்கு உயர்ந்து இருக்கும்பொழுதும்தான் என்கிறார். இப்படிப்பட்டவர்களுக்கு தான் என்ற அகந்தை கரைந்து போய்விடுவதால் இறைவனின் பரிசுத்த கருவியாக இவர்களால் செயல்பட முடிகிறது.

இப்பொழுது சிந்தனையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மற்றும் இலட்சியவாதிகள் ஆகியவர்கள் பேசுகின்ற பேச்சை எடுத்துக் கொள்வோம். இவர்கள் எல்லாம் உயர்ந்த நிலையில் இருப்பதால் இவர்களுடைய பேச்சில் இயற்கையிலேயே ஒரு கட்டுப்பாடு இருக்கும் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அப்படியில்லை. இங்கேயும் பிடிவாதம், குறுகிய மனப்பான்மை என்பவை எல்லாம் நிறைந்து இருக்கத்தான் செய்கின்றன. ஆகவே



வாதம் என்று ஆரம்பித்து முரண்பாடுகள் அதிகமாகி டிஸ்கஷன் என்பது தகராற்றில் போய் முடியக் கூடிய சந்தர்ப்பங்களுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. தகராறு கூடாது என்றால் உண்மை முழுமையில் ஒரு பக்கம் தானே தவிர இதுவே முழுமையில்லை. அடுத்தவர்களுடைய கொள்கையில் உள்ள உண்மையை நாம் ஏற்றுக் கொண்டு நம்முடையதையும், மற்றவர்களுடையதையும், எல்லாவற்றையும் ஒன்று சேர்க்கும்பொழுதுதான் முழு உண்மை வெளிவருகிறது. அக்கட்டத்தில் நாம் சுமுகத்தைக் கொண்டு வரலாம். ஆக இந்தப் பரந்த கண்ணோட்டம் வரும் வரையிலும் நம்முடைய பேச்சில் கட்டுப்பாடு இருந்தாலொழிய நாம் தகராறுகளைத் தவிர்க்க முடியாது. காஷ்மீர் விஷயமாக எப்பொழுது meeting போட்டாலும் அது இந்தியா பாகிஸ்தான் தகராற்றில் முடியும். காரணம் சம்பந்தப்பட்டவர்களின் குறுகிய கண்ணோட்டம். இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் மூன்றும் ஒன்றாக இணையும்பொழுதுதான் இந்தியா முழுமை பெறுகிறது என்ற கருத்தை மூன்று தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும்பொழுது அங்கே வாதத்திற்கோ, தகராற்றுக்கோ இடமில்லை. உண்மை, முழுமை அடையும்பொழுது தானாகவே அங்கு சுமுகம் வந்துவிடுகிறது.

அடுத்தபடியாக அன்னை என்ன சொல்கிறார் என்றால் ஐடியாக்களுக்கு பிராக்டிக்கல் பவர் இருக்க வேண்டும் என்கிறார். அதாவது அவைகளுக்குச் செயல்படும் சக்தி வேண்டும். ஆகவே எந்தெந்த ஐடியாவிற்கு இந்த சக்தி இருக்கிறதோ, அவைகளை நாம் தாராளமாகப் பேச்சில் வெளிப்படுத்தலாம் என்கிறார். ஸ்ரீ அரவிந்தம் இப்படிப்பட்ட ஒரு ஐடியா, இதற்கு உலகைத் திருவுருமாற்றக் கூடிய சக்தி இருக்கிறது. ஆகவே இதைப் பற்றி நாம் நிறையவே பேசலாம்.

இப்பொழுது கல்வி என்ற சப்ஜெக்ட்டிற்கு வருவோம். படிப்பின் பாரத்தைக் குறைத்து மாணவ மாணவியருக்கு மேலும் நிறைய relaxation கொடுக்க வேண்டும் என்று ஒரு புதிய பாணி இப்பொழுது

துவங்கியிருக்கிறது. இக்கண்ணோட்டத்தில் ஓர் உண்மை இருந்தாலும் relaxation என்ற பெயரில் மட்டமான விஷயங்களை அனுமதிக்கக் கூடாது. Story discussion என்பது ஒரு லைட்டான subject தான், இருந்தாலும் எடுத்துக் கொள்கின்ற story தரமான story ஆக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் காமரசம் நிரம்பிய நாவலை discussionக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது சூழலே தாழ்ந்து போகிறது. ஆகவே தரமான விஷயங்களை discuss செய்வது என்று முடிவு செய்தால்தான் பேச்சுக் கட்டுப்பாட்டில் நாம் வெற்றியைக் காண முடியும்.

Relaxation மற்றும் entertainment வேண்டும் என்ற எண்ணமோ மற்றும் இவை தவிர்க்க முடியாதவை என்ற நினைப்போ ஆன்மீகரீதியாக பார்க்கும்பொழுது சரியில்லை. நம்முடைய இறை ஆர்வம் (aspiration) குறையும்பொழுதும், மனவுறுதி தளரும் பொழுதும், தாமசம் தலை எடுக்கும்பொழுதும்தான் நமக்கு entertainment வேண்டும் என்று தோன்றுகிறது. ஆகவே இறை ஆர்வத்தில் நாம் ஸ்டெடியாக இருந்தோம் என்றால் தாமசமே தலை எடுக்காமல் நம்மை விட்டு விலகுவதைப் பார்க்கலாம்.

அடுத்தபடியாக வீண்பேச்சு என்று எடுத்துக் கொண்டால் ஆன்மீகத்தில் வீண்பேச்சு கிடையாது என்ற கட்டாயம் இல்லை. மற்ற subjectக்களை போலவே ஆன்மீகத் துறையிலும் வீண் பேச்சு பேசலாம். புதிதாக ஆன்மீகத் துறைக்கு வருபவர்கள் ஆர்வ மிகுதியின் காரணமாகத் தாம் கற்றுக்கொண்ட விஷயங்களைப் பற்றி நிறைய பேசுவார்கள். ஐந்து நிமிடம் அர்த்தமுள்ளதாகப் பேசவேண்டும் என்றாலும் கூட பல மணி நேரம் concentration தேவைப்படுகிறது என்பதை இப்படிப்பட்டவர்கள் நாளடைவில்தான் தெரிந்து கொள்கிறார்கள்.

குருவாக ஏற்றுக் கொண்டவர்களைத் தவிர மற்றவர்களிடம் நமக்குக் கிடைக்கின்ற ஆன்மீக அனுபவங்களைப் பற்றிப் பேசவே கூடாது என்பது ஆன்மீகத் துறையில் ஓர் அடிப்படையான கட்டுப்பாடு ஆகும். நமக்குக் கிடைக்கின்ற அனுபவம் நம் பர்சனாலிட்டியில்



நிலை பெறும்வரை அதைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். அப்படிப் பாதுகாக்காமல் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு இருந்தால் அனுபவம் நிலைபெறாமல் மறைந்துவிடும். ஒரு தீக்குச்சியைக் கொளுத்தும்பொழுது அது அணையாமல் இருப்பதற்குக் கையால் அதை மூடிக் கொள்கிறோம். கொளுத்திய தீக்குச்சி மேல் காற்றுப்பட அனுமதித்தால் உடனே அது அணைந்துவிடுகிறது. இம்மாதிரி நம் அனுபவத்தை நான்கு பேருடன் பகிர்ந்து கொள்ளும்பொழுது இந்த அனுபவத்தில் இருக்கின்ற எனர்ஜி விரயமாகின்றது. குருநாதரிடம் மட்டும் சொல்லும்பொழுது நமக்கு வழிகாட்டல் கிடைக்கிறது என்பதால் அது நமக்கு உபயோகமாக இருக்கிறது.

இப்பொழுது நாம் குருவையே எடுத்துக் கொள்வோம். அவருடைய ஆன்மீக முன்னேற்றத்தில்கூட பேச்சுக் கட்டுப்பாட்டிற்கு ஓர் இடம் இருக்கிறது. சிஷ்யர்களுக்கு வழி காட்டுவதுதான் அவருடைய வேலை என்றில்லை. அவருடைய சொந்த யோக சாதனையில் அவர் முன்னேற்றம் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும். முன்னேறுவதை அவர் நிறுத்தினார் என்றால் அவருடைய யோக சாதனையில் அவருக்கு ஓர் இறக்கம் வரத்தான் செய்யும். தமக்குக் கிடைக்கின்ற ஆன்மீக அனுபவத்தை உடனே சீடர்களிடம் பகிர்ந்து கொண்டார் என்றால் அந்த அனுபவம் கரைந்து போகக் கூடிய ஆபத்து அவருக்கும்தான் இருக்கிறது. அதே சமயத்தில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்பொழுது அவருடைய ஆன்மீக முன்னேற்றமும் அந்த அளவிற்கு விரைவு பெறுகிறது. ஆக எந்த நேரம் எதைச் சொல்வது, எதைச் சொல்லாமல் இருப்பது என்பதை அவர்தான் சூழ்நிலையைப் பார்த்து முடிவு செய்யவேண்டும். அனுபவங்களைப் பற்றிப் பேசும்போது தற்பெருமை அதில் கலந்தது என்றால் அவரிடம் உள்ள புனிதம் போய்விடும்.

இறைவனே அவதாரமாகப் பூவுலகிற்கு வரும்போது கூட அவரும் தொடர்ந்து ஆன்மீகத் துறையில் முன்னேறிக் கொண்டுதான் இருக்க வேண்டும். அவர் தம்முடைய இறைத்தன்மையைப் பூவுலகில்

பரிபூரணமாக வெளிப்படுத்த வேண்டும் என்றால், மானிடர்கள் perfectionஐ விரும்பி ஏற்க வேண்டும். கடமை உணர்வோடு நாம் இப்பொழுது செய்கின்றது எல்லாம் அன்பின் வெளிப்பாடாகச் செய்தோம் என்றால் நாம் perfectionஐ விரும்பி ஏற்பதாக அர்த்தமாகிறது. அதாவது முன்னேறுவதை ஒரு சிரமமாக நினைக்காமல் அதை ஓர் இன்பகரமான அனுபவமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய முழு ஜீவனும் ஒத்துழைத்து முயற்சி எடுக்கும்பொழுது முன்னேற்றம் என்பது இன்பகரமான அனுபவமாகிறது. இப்படி இல்லாமல் நம்முடைய பர்சனாலிடியை நாம் பலவந்தப்படுத்தும்பொழுது நமக்குச் சிரமம் அதிகரிக்கிறது. இறுதியாக இவ்விஷயத்தில் அன்னை என்ன சொல்ல விரும்புகிறார் என்றால், நம் பேச்சு உண்மை நிரம்பியதாக இருக்கவேண்டும். நம் மனதில் மௌனம் குடிகொண்டு இருக்கவேண்டும். நம்முடைய இறை ஆர்வம் இடையறாது இருக்க வேண்டும். மேலும் அந்த இறை ஆர்வத்தில் sincerity இருக்கவேண்டும். Sincerity என்றால் நம் இறை ஆர்வத்திற்குப் பின்னால் நமக்குப் பேரும் புகழும் கிடைக்கவேண்டும் என்ற ambition எல்லாம் இருக்கக்கூடாது. இப்படி எல்லாம் நம் மனம் இருந்தால் எந்தச் சூழ்நிலையில் என்ன பேச வேண்டுமோ அதை மட்டும் பேசுவதுபோல் அமையும். கூடவோ, குறையவோ பேசும்படி அமையாது. மேலும் நம் பேச்சில் ஒரு கிரியேட்டிவ் சக்தி வெளிப்படும். இந்நிலையை எட்டுவதற்குச் சில வழி முறைகள் இருக்கின்றன. அதாவது என்ன பேசப் போகிறோம் என்று முன்கூட்டியே சிந்திக்கக் கூடாது. நாம் பேசப்போவதின் விளைவுகளையும் ஆராயக்கூடாது. அதாவது நாம் சொல்வது பாசிட்டிவாக எடுத்துக் கொள்ளப்படுமா? நெகட்டிவ்வாக எடுத்துக் கொள்ளப்படுமா என்று யோசிக்கக் கூடாது. இவையே மனதில் மௌனம் குடிகொள்ளும் வழிகள்.

இருக்கின்ற கட்டுப்பாடுகளிலேயே மிகவும் கடினமானது உணர்வுக் கட்டுப்பாடுதான். இவ்விஷயத்தில் கட்டுப்பாட்டைக் கொண்டு வர முடியாது என்ற எண்ணம் மனிதனுக்கு இருக்கிறது.



காம உணர்வை அன்பு என்று நிறைய பேர் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். காமத்தின் தாக்குதலிலிருந்து தப்ப முடியாது என்று பரவலாக ஓர்அபிப்பிராயம் இருக்கிறது. காமத்தின் காரணமாக பெரிய குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

காம உணர்வைக் கட்டுப்படுத்துவதற்காக சமூகம், பலவிதமான கட்டுப்பாடுகளை உருவாக்கி இருக்கிறது. பெரும்பாலும் இந்தக் கட்டுப்பாடுகள் உடைக்கத்தான் படுகின்றன. அப்படியே காமம் தடுக்கப்பட்டாலும் பின்னால் அது பெரிய வெடிபோல் வெடிக்கத்தான் செய்கிறது. இதிலிருந்து நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டும் என்றால் கட்டுப்பாட்டுகளால் காமத்தை அடக்க முடியாது. காமத்தை விட உயர்ந்த தெய்வீக அன்பு என்ற ஒரு பெரிய சக்தியைக் கொண்டு தான் இந்த உணர்வையே நம்மால் திருவுருமாற்றம் செய்ய முடியும். தெய்வீக அன்பு என்ற ஒரு சக்தி உலகில் செயல்படாவிட்டால் உலகம் inconscient நிலைக்குப் போய்விடும்.

உலகத்தை உண்டு பண்ணியது ஜீவியம் என்றாலும், அதைக் காப்பாற்றுவது அன்புதான். தெய்வீக அன்பை நாம் அனுபவித்துதான் உணர முடியும். தத்துவ ஞானிகளும், ஆன்மீகவாதிகளும் தெய்வீக அன்பு என்ன என்று வார்த்தைகளால் வர்ணிக்க முயன்றுள்ளார்கள். ஆனால் அந்த முயற்சிகள் எல்லாம் பலன் அளிக்காமல் போய்விட்டன. நான் பெரியதாக வர்ணிக்க விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அதாவது அன்பு என்பது ஐக்கியத்தில் உண்டாகின்ற சந்தோஷத்தின் வெளிப்பாடாகும். ஐக்கிய பேரின்பமே அன்பு என்று சொல்லலாம். அன்பின் ஆதியை நாம் ஆராய்ந்து பார்த்தால் ஐக்கியத்திற்கு உதவக் கூடிய இரண்டு இயக்கங்கள் (movement) அதில் இருப்பதைப் பார்க்கலாம். ஒரு movement, அடுத்தவரை நாடுகிற நாட்டமாக அமைகிறது. இன்னொரு movement தன்னைப் பிறருக்கு வழங்கும் self-giving movementஆக அமைகிறது. படைப்பில் ஜீவியம் அதன் ஆதியிலிருந்து பிரிந்து unconsciousness

ஆக மாறியபோது ஏற்பட்ட இடைவெளியை நிரப்புவதற்கு அன்பைத் தவிர வேறு சிறந்த கருவியில்லை.

பிரபஞ்சத்தை அழிக்காமல் படைப்பை அதன் ஆதியோடு மீண்டும் இணைப்பதற்கு அவசியம் வந்தபொழுது ஐக்கியத்தின் கருவியாகிய அன்பு வெளிப்பட்டு அவ்வேலையைச் செய்ய ஆரம்பித்தது. ஆரம்பத்தில் வெளிப்பட்ட அன்பு எல்லாம் இருந்த அடர்ந்த இருளில் இடம் தெரியாமல் சிதறிப்போனது. பின்னர் ஜடம் என்று உருவாகி பரிணாமம் என்று தொடங்கிய பிறகு அன்பின் வெளிப்பாடுகளும் ஆரம்பித்தன. இயற்கையின் எல்லா இயக்கங்களிலும் மற்றும் குழுமங்களிலும் நாம் அன்பின் வெளிப்பாட்டை உணரலாம். வெளிச்சம் வேண்டி செடிகளும் மரங்களும் மேல் நோக்கி வளர்வது அன்பின் வெளிப்பாடுதான். மலர்கள் தம்முடைய அழகு மற்றும் வாசனையின் மூலம் தம்மைப் பிறருக்கு வழங்குவதும் அன்பின் வெளிப்பாடுதான். பிராணிகளுடைய பசி, தாகம் மற்றும் இன அபிவிருத்தி என்று எல்லாவற்றிற்கும் பின்னால் தெரிந்தோ, தெரியாமலோ அன்பின் இயக்கம் இருக்கிறது. இதனுடைய உச்ச கட்ட வெளிப்பாட்டை, குட்டிகளைப் பேணிக் காக்கின்ற பெண் பாலூட்டும் பிராணிகளிடம் பார்க்கலாம். மனிதனை எடுத்துக் ùLôi Pôp @ u ©u ùNVpTôÓ conscious ஆகவே இருக்கிறது. மேலும் மனிதனைப் பொறுத்த அளவில் அன்பு மற்றும் இனப்பெருக்கத்திற்கு இடையே இருந்த தொடர்பை இயற்கை மேலும் பலப்படுத்திவிட்டது. அதாவது இரண்டையுமே பிரித்துப் பார்க்கக்கூடிய சக்தி படைத்தவர்களே மிகவும் குறைவு என்றாயிற்று. அப்படி இனப் பெருக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டபின் அன்பின் தரம் இறங்கிவிட்டது என்றுகூடச் சொல்லலாம். ஆணையும் பெண்ணையும் ஜோடி சேர்ப்பது என்பது இயற்கையின் முதற்கட்ட நடவடிக்கை. அடுத்த கட்டமாகக் குடும்பத்தை உருவாக்கியது, பின்னர் படிப்படியாக ஜாதி, சமூகம், தேசம், இனம் என்று பெரிய பெரிய குழுமங்களை உருவாக்கியது. இறுதியில் இன்றுள்ள பல்வேறு நாடுகளையும், இனங்களையும் ஒன்று



சேர்த்து மானிடர்களிடையே ஓர் அடிப்படை ஒற்றுமையை இயற்கை உருவாக்கத்தான் போகிறது.

ஆனால் பெரும்பாலான மக்கள் இப்படி ஒரு திட்டத்தோடு இயற்கை செயல்படுவதாக அறிவதில்லை. அவர்களுக்கு அமைந்த வாழ்க்கைச் சந்தர்ப்பங்களை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். சிலருக்கு அதுபற்றி சந்தோஷம், சிலருக்குத் தம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலை பற்றி அதிருப்தி. வாழ்க்கையில் இன்ப துன்பங்களைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு சிற்றின்ப ஈடுபாடுகளில் முழுவதுமாக மூழ்கி இருப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். வாழ்க்கைக்கு ஏதாவது உயர்ந்த நோக்கம் இருக்கிறதா என்ற கேள்வியே அவர்களுக்கு வருவதில்லை. முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு இருப்பது இல்லை. இப்படிப்பட்டவர்களை யோகப் பாதைக்கு அழைப்பதே தவறு. ஆன்மீகத்தைப் பற்றி இப்படிப்பட்டவர்களுடன் பேசினால் அவர்கள் நிலை குலைந்து போவார்கள். இயற்கையோடு அவர்களுக்கு இருக்கின்ற நெருக்கமான மற்றும், சுமுகமான உறவை நாம் அனாவசியமாகக் கெடுக்கக் கூடாது.

அன்பின் வெளிப்பாட்டையும், அதனால் கிடைக்கின்ற சந்தோஷத்தையும் ஏதோ ஒரு ரூபத்தில் உணர்ந்தவர்களும் இருக்கிறார்கள். தம்முடைய குடும்பத்திற்காகவும், தேசத்திற்காகவும், மதத்திற்காகவும் self-givingஇல் ஈடுபட்டு அதன்மூலம் பெருமகிழ்ச்சி அடைந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பெருமகிழ்ச்சி அவர்களுக்கு இறைவனோடு ஒரு தொடர்பு கிடைத்ததுபோன்ற உணர்வைக் கொடுக்கிறது. ஆனால் இந்தத் தொடர்பு பெரும்பாலும் தற்காலிகமாகத்தான் இருக்கிறது. பரிசுத்தமான அன்பாக இருந்தால் கூட இறைவனோடு கிடைக்கின்ற தொடர்பு நீடிக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அன்பு என்பதே இறைவனுடைய பல அம்சங்களில் ஓர் அம்சம்தான். ஓர் அம்சத்தை மட்டும் வைத்துக் கொண்டு நாம் நிரந்தரத் தொடர்பை அனுபவிக்க முடியாது.

இயற்கையினுடைய வேகம் போதும் என்பவர்களுக்கு அன்பினுடைய மானிட வெளிப்பாடே போதும். ஆனால் மானிட நிலையையே தாண்டி சத்திய ஜீவிய நிலைக்கு உயர விரும்புவர்களுக்கு இந்த இயற்கையின் வேகமோ மற்றும் மானிட அன்பின் வெளிப்பாடோ போதாது. இவர்கள் மானிட அன்பின் எல்லா ரூபங்களையும் ஒதுக்கி வைக்க வேண்டும். மானிட அன்பு எவ்வளவு பரிசுத்தமாக இருந்தாலும், மானிட அன்பு என்பது இறைவனோடு உள்ள தொடர்பிற்கு ஒரு குறுக்கீடாகவே அமைகிறது. இறை அன்பை உணர்ந்தவர்களுக்கு, மற்ற எல்லாவித அன்பும் தரம் குறைந்ததாகவே தெரியும். மானிட அன்பின் உயர்ந்த வெளிப்பாட்டில் கூட, சுயநலம், முரண்பாடு, ஆதிக்கம், எரிச்சல் இவை எல்லாம் கலந்து இருக்கத்தான் செய்கின்றன.

நாம் எதை விரும்புகிறோமோ அதாக மாறுகிறோம் என்பது பரவலாகத் தெரிந்த உண்மை. ஆகவே தெய்வத்தோடு ஐக்கியமாக வேண்டும் என்பவர்கள் இறைவனை மட்டும் விரும்ப வேண்டும். இறைவனோடு அன்பு பரிமாற்றம் செய்து கொண்டவர்களுக்குத் தான் அதோடு ஒப்பிடும்பொழுது மற்ற அன்பு வெளிப்பாடு எல்லாம் எவ்வளவு ருசி இல்லாமல் இருக்கிறது என்பது தெரியும். இறை அன்பை உணர கடுமையான கட்டுப்பாடுகள் தேவை என்றாலும் கிடைப்பது பேரின்பம் என்பதால் எந்தக் கட்டுப்பாட்டையும் நாம் ஏற்றுக் கொள்ளலாம் என்று சொல்லலாம்.

தெய்வீக அன்பு பூரணமாக வெளிப்படக்கூடிய நேரம் உலகத்தில் ஓர் அற்புதமான நேரம் என்றாகிறது. அப்படி இறை அன்பு முழுவதும் வெளிப்படும்பொழுதுதான் இந்தப் பூவுலகமும் இறைவனுக்கு ஏற்ற இருப்பிடமாகிறது. மனிதனுக்கும், தனக்கும் உள்ள இடைவெளியை குறைப்பதற்காக இறைவன் மானிட வடிவம் எடுத்து, அவ்வடிவத்தின் மூலம் இறை அன்பை வெளிப்படுத்த முயன்றது உண்டு. ஆனால் பவித்திரமான அன்பிற்கு உலகம் பாத்திரமாக இல்லாதபோது மனித வடிவில் இறைவன் எடுத்த முயற்சிகள் வீணாகி உள்ளன. மேலும்



இறைவனும் மனிதனை நாடிவரும்பொழுது இறைவன் பலஹீனமாகிவிட்டான் என்று மனிதன் தன் அகந்தையால் நினைக்கின்றான். ஆகவே, மனிதன் தன் தரத்தை உயர்த்திக் கொள்ளும்வரை இறைவன் காத்திருக்க வேண்டியுள்ளது. மனிதனின் குறைபாடுகளையும் மீறி, அவனுக்கே இப்பொழுது என்ன புரிகிறது என்றால், உலகத்தில் துன்பங்களைத் தீர்ப்பதற்கு இறை அன்பு ஒன்றால்தான் முடியும் என்று தெரிகிறது. இந்த அன்பு வெளிப்படும் பொழுதுதான் இறைவனிடமிருந்து பிரிந்து வந்ததால் விளைந்த வேதனையிலிருந்து படைப்பால் மீற முடியும். நாம் எடுக்கும் முயற்சிகள் எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அம்முயற்சியின் பலனாக மானிட உடம்பு இறைவனைப் பரிசுத்தமாக வெளிப்படுத்தக் கூடிய பக்குவத்தைப் பெறும் என்றால் அந்த முயற்சியை நாம் எடுக்கலாம். அப்படியானால் என்ன முயற்சியை எடுக்க வேண்டும், அதன் கட்டங்கள் என்ன என்று கேட்பீர்கள்.

நம்முடைய அன்பை எல்லாம் இறைவனுக்கே தருவது என்று முடிவு செய்து உள்ளோம். ஆகவே மற்றவர்களோடு நமக்கு இருக்கின்ற உறவில் எந்நேரமும் சுயநலமில்லாத ஒரு கருணையையும், நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தினாலே போதும். நம்முடைய நல்லெண்ணத்திற்குப் பிரதிபலனாக ஓர் அங்கீகாரத்தையோ அல்லது நன்றி அறிதலையோகூட நாடக் கூடாது. மற்றவர்கள் நம்மை எப்படி நடத்தினாலும் நாம் அவர்கள் மேல் எரிச்சலை வளர்த்துக் கொள்ளக் கூடாது. மற்றவருடைய கோபம், மற்றும் கெட்டெண்ணத்திலிருந்து இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்று நாம் செயல்பட்டுக் கொண்டு இருக்கவேண்டும். நமக்கு ஓர்ஆதரவு வேண்டும் என்றால் அதை இறைவனிடம் மட்டும் கேட்க வேண்டும். அவர் நமக்கு வழிகாட்டி. தடுமாறும்போது நமக்கு ஒரு தெளிவை வழங்கி, சிரமப்படும்பொழுது ஆறுதலைச் சொல்லி நமக்கு வேண்டியதை எல்லாம் செய்வார். ஆக இறுதியாகச் சொன்னால் உணர்வுக் கட்டுப்பாடு என்பது எல்லாவித பாசபந்தங்களையும் விட்டுவிட்டு

இறைவனோடு மட்டும் ஒரு பாசப் பிணைப்பை வைத்துக் கொள்ள வேண்டும் என்றாகிறது. இறைவன் மேலேயே குறியாக இருக்கும்பொழுது இறைவனோடு நமக்கு ஓர் ஐக்கியம் கிட்டுகிறது. அது நம்முடைய சத்திய ஜீவிய திருவுருமாற்றத்திற்கு உதவுகிறது. பாசபந்தங்களிலிருந்து உணர்வுகள் விடுபடும்பொழுது பாசப் பிணைப்புகளால் வருகின்ற துன்பங்களில் இருந்தும் விடுதலை கிடைக்கிறது. அறிவு அறியாமையில் இருந்து விடுபடும்பொழுது நமக்கு சத்தியஜீவிய ஞானம் கிடைக்கிறது. சத்திய ஜீவன் நமக்குள் பிறக்கும்பொழுது அதன் படைப்புத் திறனும் நமக்கு வருகிறது. ஆசையிலிருந்து விடுபடும்பொழுது நம்முடைய மன உறுதியை இறைவனுடைய மன உறுதியுடன் இணைத்துக் கொள்ளக்கூடிய திறன் கிடைக்கிறது. இதன் விளைவாக நமக்கு எந்நேரமும் அமைதியும், தெளிவும் கிடைக்கின்றன. இறுதியாக உடம்பிற்கு கிடைக்கும் விடுதலையின் பலனாக இயற்கையின் பிடியிலிருந்து நாம் விடுபடுகிறோம். அதாவது இயற்கையின் விதிமுறைகள் மனிதர்களைச் சாதாரண வாழ்க்கை என்ற தெரிந்த பாதையிலேயே இறுக்கப் பிடித்து வைத்து இருக்கின்றன. அறிவில்லாமல் இயற்கையின் அடிமையாக மாறிவிடுவார்கள். இயற்கையின் பிடியிலிருந்து உடம்பை விடுவித்துக் கொண்டவர்கள் என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்பதைச் சுதந்திரமாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். மற்றவரைப்போல எதுவும் புரியாமல் இயற்கை போட்ட வட்டத்திலேயே உழன்று கொண்டு இருக்கத் தேவையில்லை.

❋ ❋ ❋



**Consultancy**

## “பொறுப்பால் வரும் அதிர்ஷ்டம்”

Consultancy clients வாடிக்கைக்காரர்கட்கு நாம் சொல்பவை ஏராளம். முதற் காரியம் சுத்தம். மேலும் அதிகமான விஷயங்களைச் சொல்கிறோம். அன்னையின் கோட்பாடுகளில் சக்தி வாய்ந்தது பொறுப்பு. நானுள்ள இடத்தில் எந்தக் காரியம் தவறிப் போனாலும், அதற்கு நானே பொறுப்பு என்பது அந்த நோக்கம். இதில் மேலும் அன்னை விசேஷம் ஒரு காரியம் கெட்டுப்போனால் ஒருவர் இதுபோல் உணர்ந்து மனம் மாறினால், கெட்டுப் போன காரியம் மாறி பலன் வரும். இது உயர்ந்த திறமை. மனித சுபாவத்தில் நல்லதும், கெட்டதும் கலந்திருப்பதை நாம் கண்டு மனிதர்களை கணக்குப் போடுவதால், நமக்கு, கெட்டதுடன் கலந்துள்ள நல்லது தெரிவதில்லை.

கோள் சொல்வது, ஒட்டுக் கேட்பது, திருடுவது, கெட்ட நடத்தை, பொய் சொல்வது ஆகியவை மன்னிக்க முடியாத குற்றங்கள். நாணயம், விஸ்வாசம், பொறுப்பு, தன்மானம், திறமை, வலிமை ஆகியவை கலந்துவரும்.

ஒரு கம்பெனி நொடித்துப் போனால், அதில் முக்கியஸ்தர் மேற்சொன்னதுபோல் பொறுப்புள்ளவரானால் கம்பெனி நிமிரும். தனி மனிதனுக்கும் அதுவே சட்டம். அப்படி மாறிவரும்பொழுது கெட்ட குணங்கள் தொடர்ந்திருப்பதால் வரும் நல்லது பலிக்காது.

தோட்டத்தில் வேலை செய்பவன் அடங்காப்பிடாரி. வாயாடி. கெட்ட நடத்தைக்குப் பேர் போனவன். எந்தத் தப்பு செய்தாலும், சரி எனச் சாதிப்பான். இவனை எங்கும் நெடுநாள் வைத்திருக்க மாட்டார்கள். பெண்கள் இவனிடம் தப்ப முடியாது. ஆனால் திறமை அதிகம். யோசனை அதிகம். பொறுப்புணர்ச்சியுண்டு. தனக்குரிய வேலையில்லை என்றாலும், தன் கண்ணில் பட்டதைக் காப்பாற்றுவான். எவரும் இவனுடைய பொறுப்பைக் கண்டு கொள்வதில்லை. செய்தால்

ஏற்றுக்கொள்வார்கள். வாய் வார்த்தையும் நல்ல சொல்லால் கண்டுகொள்ள மாட்டார்கள்.

40 மூட்டை தான்யம் மழையில் நனைந்து அழிவதை, செய்ய வேண்டியவர்கள் மறந்து போனபொழுது, பொருள் அழியக்கூடாது என ஒரு சிறுவனை வைத்துக்கொண்டு காப்பாற்றினான். பொருளுக்கு உரியவர் வந்து பொருள் அழிந்து போயிருக்கும் என நினைத்தபொழுது, (உரியவர் எவரும் பொறுப்பில்லாமல் போய்விட்டதால்) யாரோ காப்பாற்றினார்கள் எனக் கண்டும், அதைப் பாராட்டவில்லை. பிற்காலத்தில் இவன் அன்னையை அறிந்தான். எந்த வகையிலும் இவனுடைய போக்குக்கு அன்னை ஒத்து வரவில்லை. மனம் குரங்காக இருக்கிறது. வேலை செய்தும் சாப்பாடு இல்லை. அவனையும் மீறி அன்னை அவன் வாழ்வில் நுழைந்தார். உள்ள வேதனை அதிகமாயிற்று. பல விஷயங்கள் நடக்கின்றன. எதுவும் பிடிபடுவதில்லை. நல்லதும் ஏராளம். கெட்டதும் ஏராளம். மனம் அன்னையை அறிய விருப்பப்படவில்லை. சுபாவம் தலை தூக்கியுள்ளது. சுபாவத்திற்குரிய பலன் தவறாது கிடைக்கிறது!

தினசரி 15 ரூபாய் கூலி. இவன் தன் திறமைகளை மட்டும் ஏற்று, மற்றதை விலக்க முன் வந்தால் 15 ரூபாய், 150 ரூபாய் ஆகாது, 1500 ரூபாயாகும். இவனறியான். இவன் மாறாவிட்டாலும், நிலைமை மாறியது. இவனுக்குள்ள திறமைகட்கு வாழ்க்கை பரிசளிக்கும் என்று இவன் மனதில் பட்டது. மனம் மாற்றத்தை ஏற்றது. மனப் போராட்டம் பெரியது. போராட்டம் ஆரம்பித்தவுடன், பெரிய அதிர்ஷ்டம் பலித்துவிட்டது. படிப்பு, அனுபவம் இல்லையென்றாலும், மற்றவர்கள் விட்டுவைப்பார்களா? எனத் திகில் பற்றியது. கொடுத்ததை அன்னை எடுக்கமாட்டார். பயத்தைப் பாராட்டாமல் பக்தியைப் பாராட்ட வேண்டும் என்று அவனிடம் யார் சொல்வது?

❋ ❋ ❋





# “கூ”வின் மருத்துவம்
## Dr. Coue's method of medicine

Dr. Coue's என்பவர் வியாதியைக் குணப்படுத்த மனஉறுதி, நம்பிக்கை, auto-suggestion நமக்கு நாமே சொல்லிக் கொள்வது போன்றவற்றைப் பயன்படுத்துகிறார். மாலை நேர உரையாடல்களில் ஒரு நாள் இந்த விஷயம் பேசப்பட்டது. இதைப் பற்றி பகவான் பேசுகிறார். யோகத்திற்கு இம்முறை பயன்படுமா எனவும் கேட்கிறார்கள். இதைப் பற்றி பகவான் கூறியவை, அன்றைய உரையாடலில் எழுந்த பிரச்சினைகள் :

- ★ இந்தியர் குடும்பங்களில் யாராவது ஒருவர் உடல்நலம் குன்றிப் படுத்துவிடுவது வழக்கம், வியாதியை நாம் எப்படி எடுத்துக் கொள்ளவேண்டும்?
- ★ வியாதியைக் குணப்படுத்த டாக்டர் கூ முறையைப் பயன்படுத்த ஆட்சேபனை நமக்குண்டா?
- ★ யோகி வேலை செய்யலாமா?
- ★ கூ வின் முறையைப் பயன்படுத்தி வியாதியைக் குணப்படுத்துவதில் எந்த ஆட்சேபணையுமில்லை.
- ★ இம்முறை auto-suggestion நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் முறை. அம்முறையால் சத்திய ஜீவியத்தை எட்ட முடியாது. அது எளிதன்று.
- ★ இந்த யோகத்திற்கு - எந்த யோகத்திற்கும் - இம்முறை பயன்படாது.
- ★ நான் தூய்மையானவன் என்று மனம் சொல்லிக்கொண்டே இருப்பதால் நாம் தூய்மையாக முடியாது.
- ★ தூய்மை என்பது ஓர் உளநிலை.
- ★ எங்கு, தூய்மை குறைந்துள்ளது எனப் பார்க்க வேண்டும்.
- ★ தெய்வ சக்தியை அதனுள் அழைக்க வேண்டும்.
- ★ பிறகு தூய்மைக்காகப் பிரார்த்திக்க வேண்டும்.

★ ‘கூ’வின் முறையில் will உறுதிக்கும் imagination கற்பனைக்கும் வித்தியாசம் முக்கியம்.

★ நாம் எதை உறுதி என்கிறோமோ, கூ அதைச் சொல்லவில்லை.

★ மனம் செயல்படுவதை அவர் உறுதி என்று கூறவில்லை.

★ தம் ஆசைகளைப் பூர்த்தி செய்ய உணர்வு உந்துவதும் உறுதியாகாது.

★ உறுதி என்பது அமைதியானது.

★ அமைதி மேல் உள்ள சக்தியை அழைக்கும்.

★ இவையன்றி இயற்கையை மீறி ஆளும் உறுதியுண்டு.

★ வேறு ஒரு வகை உறுதியொன்றுண்டு. அது ஆர்வம். பிரார்த்தனை போன்றது. மேலேயுள்ள சக்தியை அழைக்கவல்லது.

★ உறுதிகளில் உயர்ந்தது இறைவனுடைய உறுதி.

★ அது தானே automatic செயல்படும்.

★ Faith நம்பிக்கை எல்லா இடங்களிலும் தேவை. கூவின் மருத்துவத்திற்கும் தேவை.

★ எந்த முறையும் யோகத்திற்கு ஆரம்பத்தில் பயன்படும். அதுபோல் கூ வின் முறையும் பயன்படும்.

★ எந்த முறையும் - ஆசனம், பிராணாயமம், ஜடம், அறிவு, கட்டுப்பாடு, உறுதி, auto-suggestion - கடைசிவரை இந்த யோகத்திற்குப் பயன்படாது.

★ ‘கூ’வின் முறை அனைவருக்கும் பயன்படுவதில்லை.

★ ‘கூ’வின் முறை நம் ஆழ்மனத்தை மயக்கமாக்கும் முறை hypnotising the unconscious .

★ யோகம் தன்னையறியும் முறை becoming conscious. அவை நேர் எதிரானவை.

★ யோகத்திற்கு வியாதியைக் குணப்படுத்தவது இலட்சியமில்லை.

★ நம் ஜீவியத்தைத் திருவுருமாற்றுவதே இலட்சியம்.

★ பலருடைய ஆழ்மனம் மயக்கத்தை மறுப்பதால் அவர்களிடம் கூவின் முறை பலிப்பதில்லை.

★ வேலை செய்வதும் யோகம் செய்வதும் முரணானவையில்லை.

❊ ❊ ❊



# “அன்பர் கடிதம்”

## அன்னையின் அருளமுதம்

நான் எழுதும் அனுபவங்கள் அனைத்தையும் முதலில் என் அன்னைக்கு, அருளின் வடிவத்திற்கு, கருணையின் உருவத்திற்கு, சாந்தத்தின் சொரூபத்திற்கு, அன்பின் சாகரத்திற்கு சமர்ப்பணம் செய்து அன்னையின் அருளையும், அவர்கள் எங்கள் வாழ்வில் நிகழ்த்திய அற்புதங்களையும் அன்னையின் பாதாரவிந்தங்களில் சரணடைந்து அவர்களின் பேரருள் வேண்டி எழுதுகிறேன். இப்படியொரு சந்தர்ப்பத்தை எனக்களித்த அன்னைக்கு என் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கை ஆக்குகிறேன்.

எங்களுக்குத் திருமணமாகி 10 மாதங்கள் ஆகியது. குழந்தைப்பேறு வேண்டுமென்று மனமுருகி அன்னையிடம் பிரார்த்தனை செய்தோம். அன்னையின் அருளால் நான் கருவுற்றேன். அப்பொழுதே பிறக்கப் போவது ஆண் குழந்தையானால் அரவிந்த் என்றும் பெண் குழந்தையானால் மீரா என்றும் பெயர் வைக்கப் போவதாக அன்னையிடம் வேண்டிக் கொண்டோம். கருவுற்ற 74-ஆம் நாள் திடீரென்று threatened abortion ஆனது. எங்களுக்கு அன்னையிடம் பிரார்த்தனை செய்வதைவிட வேறு எவரையும் எந்த உதவியும் கேட்கத் தோன்றவில்லை. நான் மிகவும் மனமுடைந்து அழுதேன். என் கணவருக்கும் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. அப்பொழுது அதிகாலை 5.30 மணி இருக்கும் என்று நினைக்கிறேன். நாங்கள் இருக்கும் இடத்தில் மருத்துவர் 3-4 கி.மீ தள்ளி இருக்கிறார். மேலும் கிளினிக் 9 மணிக்கு மேல்தான் திறப்பார்கள் என்று அறிந்தோம். நான் அழுது கொண்டே அன்னையிடம் இந்தக் குழந்தையை நல்லபடி காப்பாற்றிக் கொடுங்கள் தாயே என்று வேண்டிக் கொண்டு அன்னையின் மலரை வயிற்றில் வைத்துக் கொண்டு என் கணவருடன் two wheelerஇல் மருத்துவர் யாரேனும் இருப்பார்களா என்று தேடிக் கொண்டு புறப்பட்டோம். அப்பொழுது காலை 7.00 மணி. நாங்கள் அந்த ஊருக்குப் புதிதாய் வந்தவர்கள், ஆதலால் மருத்துவமனைகள் எங்கெங்கே இருக்கும் என்று தெரியவில்லை.

சென்ற ஓரிரு இடங்களிலும் மருத்துவர் 10 மணிக்கு மேல்தான் வருவார்கள் என்று கூறிவிட்டனர். இப்படியே அங்கும் இங்கும் அலைந்து இறுதியில் 10.15 மணியளவில் ஒரு மகப்பேறு மருத்துவரிடம் சென்று காண்பித்தோம். அவர்களும் முதலில் scan செய்து பார்த்தபிறகுதான் treatment கொடுக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். இறுதியில் scan செய்து பார்த்தபின் அன்னையின் அருளால் அது சிறிய பாதிப்பு என்றும் இருந்தாலும் 6 மாதங்கள் ஆகும் வரை complete bed restஇல் இருக்க வேண்டும் என்றும் கூறி மருந்துகள் கொடுத்து injection போட்டு அனுப்பினார். அந்த மருத்துவரின் உருவத்தில் நான் அன்னையைத்தான் பார்த்தேன். இப்படியாக 8 மாதங்கள் நல்லபடியாக போனபின் ஒரு நாள் நடந்து போகும் போது தவறி விழுந்து அடிபட்டு கை, கால்களில் சிராய்ப்பு ஏற்பட்டும் வயிற்றில் அடிபடாமல் என் அன்னைதான் காப்பாற்றினார். எங்கள் ஊரில் மருத்துவ வசதி அவ்வளவாக இல்லாததாலும், மேலும் எனக்கு 75% சிசேரியன் நடக்கலாம் என்று மருத்துவர் கூறியதாலும் சென்னைக்குச் சென்று பிரசவம் பார்க்கலாம் என்று அன்னையிடம் பிரார்த்தித்தோம். சில குடும்பப் பிரச்சனைகளால் என்னால் என் தாய் வீட்டில் இருக்க முடியாததாலும், மேலும் எங்கள் family doctorஇன் nursing home எங்கள் வீட்டிலிருந்து 1 மணி நேரம் travel செய்ய வேண்டிய distanceஇல் இருந்ததாலும் nursing homeக்கு அருகிலேயே வீடு பார்க்கலாம் என்று நினைத்து அன்னையை வேண்டி முயற்சியில் இறங்கினோம். 2 மாதங்கள் என்பதால் சென்னையில் யாரும் இடம் தரமுடியாது என்று கூறிவிட்டனர். இருந்தாலும் நாங்கள் மனம் தளரவில்லை. அன்னையால் எதுவும் முடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆதலால் நாங்கள் சென்னைக்குச் செல்ல நாள் பார்த்து preparation எல்லாம் செய்ய ஆரம்பித்துவிட்டோம், அன்னை எங்களை ஒருபோதும் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில். எங்களின் நம்பிக்கையை நிறைவேற்றி அன்னை உடனே ஒரு வீடு, அதுவும் nursing homeக்கு அருகிலேயே அமைத்துக் கொடுத்தார். இதை எழுதும்போது ஆனந்தத்தில் என் மனம் நெகிழ்ந்து கண்ணீர் பெருக்கெடுக்கிறது. என் தாயின் கருணையை விவரிக்க இந்த ஜென்மம் போதாது, அதற்கு வார்த்தைகளும் போதாது. அன்னை



கருணையின் கடல். ஒரு சிறிய கரப்பான் பூச்சியைப் பார்த்தாலே பயப்படும் எனக்கு சிசேரியன் என்ற போது ஒரு சிறு பயமோ, கலக்கமோ ஏற்படவில்லை. காரணம் அன்னை என்னையும் என் குழந்தையையும் காப்பாற்றுவார்கள் என்ற அபரிமிதமான நம்பிக்கை. மேலும் மருத்துவர் மற்றும் nurseகளின் உருவத்தில் நான் அன்னையைத்தான் பார்த்தேன். 9ஆம் மாத முடிவில் scan செய்து பார்த்தபோது கொடி சுற்றிக் கொண்டிருப்பதால் 90% சிசேரியன் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. திடீரென்று ஒரு நாள் மூச்சு விட மிகவும் கஷ்டப்பட்டு மருத்துவரிடம் சென்றபோது உடனே சிசேரியன் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் anaesthetist வராததால் மேலும் ஒரு நாள் அவர்களின் observationஇல் வைத்துக் கொண்டிருந்துவிட்டு மறுநாள் காலை 7.20 மணிக்கு operation செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். நான் operation theatreக்கு செல்வதற்கு 10 நிமிடம் முன்பு என் கணவர் நாங்கள் வைத்திருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை கைதவறி சுக்கு நூறாக உடைத்துவிட்டார். என் தாயாருக்கோ மிகவும் வருத்தம், பயம் எல்லாம். என் கணவரோ மனம் வருந்தி உடனே வெளியில் சென்றுவிட்டார். நானோ சிறிதும் கவலைப்படவில்லை. ஏனென்றால் காலை எழுந்ததிலிருந்தே நான் centreல் தினமும் எழுதும் messageஐ படித்துக் கொண்டிருந்தேன். கண்ணாடி உடையும் முன்பு நான் படித்த வாசகம் -

> "Difficulties come always to make us progress;
> The greater the difficulty, the greater can be the progress;
> Be confident and endure;
> The hours preceding victory are most often the most difficult."

அதனால் நான் சிறிது கூட பதட்டப்படாமல் அன்னையின் மலரை எடுத்துக்கொண்டு operation theatre சென்றுவிட்டேன். அன்னையின் அருளால் எங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. நானும் மிகவும் சீக்கிரமே recover ஆகி Chennaiஇல் இருந்து குழந்தையுடன் எங்கள் ஊருக்கு வந்துவிட்டேன். குழந்தைக்கு அரவிந்த் என்று பெயர் வைத்து இருக்கிறோம். Operation செய்திருப்பதால் 6 மாதங்கள் அதிக கஷ்டமான வேலைகளைச் செய்யக்கூடாது என்பதால் என்ன செய்யப்போகிறோம் என்று

கவலைப்பட்டோம். ஏனென்றால் இங்கு எனக்கு உதவி செய்ய வேறு யாரும் இல்லை. நானும், என் கணவரும், என் குழந்தையும் மட்டும் தான் இருக்கிறோம். Operation முடிந்து 45 நாட்களே ஆன நிலையில் அன்னை இருக்கிறார் என்ற தைரியத்தில் கைக்குழந்தையுடன் எங்கள் ஊருக்கு வந்துவிட்டேன். அன்னை மறுநாளே ஒரு மிக நல்ல அம்மையாரை எனக்குத் துணையாக அழைத்து வந்தார். நாங்கள் அடைந்த சந்தோஷத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. எங்கள் குழந்தைக்கு 6 மாதம் ஆகும்வரை எங்கள் வீட்டில் இருந்தார். அவரை நாங்கள் அன்னையாகவே கருதினோம். கருதுகிறோம். மேலும் ஓர் அற்புதம் பற்றி எழுதுகிறேன். Scanஇல் கொடி சுற்றியுள்ளது என்று தெரிந்த பின் என் தாயார் மிகவும் பயந்தார்கள். குழந்தை பிறந்தவுடன் மாமா இருவரும் எப்படி உடனே குழந்தையை வந்து பார்ப்பது? என்று வேதனைப்பட்டார்கள். ஆனால் அன்னையின் அருளால் குழந்தை கொடி சுற்றாமலேயே பிறந்தது. மாமா இருவரும் அடைந்த மகிழச்சிக்கு எல்லையே இல்லை. நான் கருவுற்றது முதல் குழந்தை பிறந்தவரை நடந்த, அன்னை எங்கள் வாழ்வில் நிகழ்த்திய அற்புதங்கள் அனைத்தையும் மனம் நெகிழ்ந்து எழுதி இருக்கிறேன். இவை அனைத்தும் வெளிப்படுத்தும் உண்மை என்னவென்றால் அன்னையிடம் பூரண நம்பிக்கை வைத்து நம் குறைகளை, நம் தேவைகளை, நம் பிரச்சினைகளை மறைக்காமல் சொல்லி முழு மனத்துடன் சமர்ப்பணம் செய்து பிரார்த்தனை செய்தால் கண்டிப்பாக அன்னை எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து நம் பிரச்சினைகளைத் தீர்த்து நம் பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பார். ஆகவே எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மனம் தளராமல் அன்னை நமக்கு நல்லதே செய்வார் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டால் நமக்கு வெற்றி நிச்சயம். என்னுடைய அனுபவங்களை, அன்னை எங்கள் வாழ்வில் நிகழ்த்திய அற்புதங்களை எழுத எனக்கு அளித்த இந்த சந்தர்ப்பத்திற்கு மீண்டும் மீண்டும் மனமுருக என் நன்றியை அன்னைக்குக் காணிக்கையாக்குகிறேன். அன்னையின் பேரருள், அன்னையிடம் சரணடையும் எல்லோருக்கும் அள்ள அள்ளக் குறையாத கற்பக விருட்சமாக வளரும் என்று அன்னையிடம் பிரார்த்தித்து என்னுடைய இந்தக் கடிதத்தினை நிறைவு செய்கிறேன்.

❋ ❋ ❋





## Vol I P. 120 Knowledge of past life comes from an identification with the Origin

## ஆதியோடு இணைந்தால் பூர்வஜென்ம ஞானம் வரும்

பூர்வ ஜென்ம ஞானம் சம்பந்தமாக அன்னை வாழ்விலுள்ளவை.

- ***எவருடைய பூர்வ ஜென்மத்தையும் அறிய விரும்பினால் அறியும் திறனுடையவர் அன்னை.***
- ***பலருடைய பூர்வ ஜென்ம அனுபவங்களை அன்னை விளக்கியுள்ளார்.***
- ***அது தேவையில்லை என ஸ்ரீ அரவிந்தர் கூறியதால் நிறுத்திவிட்டார்.***
- ***தமக்கே தம் பூர்வ ஜென்மம் தெரிவது பலன் தரும். பிறர் கூறுவதால் பலனில்லை என்று அன்னை கூறுகிறார்.***
- ***அன்னையை அறிந்து யோகப் பலன் பெறுபவர் பல ஜன்மப் பலனை அடைகிறார்.***
- ***பொதுவாக ஆணாய்ப் பிறந்தவர் தொடர்ந்து ஆணாகப் பிறப்பார்.***
- ***ஆன்மாவுக்கு மாறும் - பெண் ஜன்மம் ஆண் ஜன்மமாக - திறனிருந்தாலும் பெரும்பாலும் மாறுவதில்லை.***
- ***என்றும் உயிரோடுள்ளவரை நாம் இறந்தவர் என்கிறோம்.***

அறியாமையை 7 வகைகளாகப் பிரித்து முதல் வகை என்ன செய்வது என்று தெரியாத அறியாமை என்றும் முடிவானதை ஆதியை அறியாதது எனவும் கூறிய பகவான்,

**ஆதியை அறிந்த பின்னரே என்ன செய்வது எனத் தெரியும் என்கிறார். அன்னை,**

**ஆதியை அறிந்தால் பூர்வ ஜென்ம ஞானம் பிறக்கும் என்கிறார். எனவே,**

**இன்று அடுத்த நிமிஷம் என்ன செய்யவேண்டும், எதைச் செய்தால் தவறே வாராது என அறிய பூர்வ ஜென்ம ஞானம் உதவும் என அறிகிறோம்.**

மறு பிறவியிருப்பதால் ஆன்மா வளர முடிகிறது. ஒரே பிறவியில் ஆன்மா தனக்குரிய முழு வளர்ச்சியைப் பெற முடியாது என்கிறார் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

- பிரம்ம ஞானம் என்பது ஆதியான பிரம்மத்தை அறிவது.
- பூர்வ ஜென்ம ஞானம் பிரம்ம ஞானத்திற்கு உதவும்.
- எதைச் செய்தால் தவறே வாராது என்பது பூர்வ ஜென்ம ஞானத்தைப் பெற்ற பிரம்ம ஞானத்திலிருந்து எழுவது.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அருள் தன்னைச் சூழ்ந்துள்ளதை உணர்பவனுக்கு ஆபத்து வருவதில்லை. அருள் மீது நம்பிக்கையுள்ளவர் தன்னுடன் விபத்து நிகழ முடியாத சூழலைக் கொண்டு வருவார்.

*விபத்தை விலக்கும் அருளின் சூழல்.*





## எது நியாயம்

(செப்டம்பர் இதழ் தொடர்ச்சி...) *இல. சுந்தரி*

“ஐயய்யே, என்னங்க இதைப் போய் இவ்வளவு பெரிசுபடுத்துகிறீர்கள். பெத்த மனம் துன்பப்படுது. உங்க மேல உள்ள பாசத்தால வருகிற கோபம் அது. வெளிப்படும் விதம்தான் கோபமே தவிர, அதன் ஆரம்பம் உங்கமேலே உள்ள அன்புதான். எனக்கு அது புரியுது. அதனால அவங்க மேல எனக்குக் கோபம் வரலங்க. அனுதாபந்தானிருக்கு. உங்க தங்கமான மனசு ஊருக்கு ஒதவுறீங்க. அதைத் தடுக்க எனக்கு மனசில்ல” என்றாள்.

“உண்மையில் நீதான் என் பலம்னு நெனக்கிறேன் கண்ணம்மா” என்றான்.

“அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. என்னைக் கல்யாணம் பண்றதுக்கு முன்னாலேயும் நீங்க இப்படித்தான் இருந்தீங்க” என்றாள்.

“அப்போ பலமில்லாமல் இருந்தேன். இப்போ பலமா இருக்கேன். உன் ஆதரவுதான் என் பலம்” என்றான்.

“அதுதானே என் தர்மம்?” என்றாள்.

இவ்வாறு காலம் செல்லும்போது இரண்டு ஆண் மக்களுக்குப் பெற்றோராயினர். இவள் பிரசவம், குழந்தைகளின் காய்ச்சல் யாவும் அவன் அம்மாவின் துணையால் கணவனின் பொதுத் தொண்டு நேரத்தில் நடைபெற்றன. இப்படி வயசான காலத்தில் தனியா கஷ்டப்படணும்னு என் தலையெழுத்து. இவனுக்கு ஆசையா கல்யாணம் கட்டி வெச்சேன். பொண்டாட்டி புள்ளங்க சுகத்தைப் பாக்காம ஊருக்கு நல்லது செய்யப்போறான் என்று புலம்பினாள் வள்ளியம்மை.

கவலப்படாதீங்க அத்தை உங்க பேரங்க உங்களை வயசான காலத்துல தாங்குவாங்க என்பாள் கண்ணம்மா. சிறுவயது முதலே அவர்களைப் பாட்டியின் மீது அன்புடனும் மரியாதையுடனும் நடக்கப் பழக்கிவிட்டாள். எந்நேரமும் குழந்தைகள் பாட்டியின் பரிவில் மகிழ்ந்தனர்.

வேலையில் அவன் காட்டிய நேர்மை, கடும் உழைப்பு இவையெல்லாம் அவனை உயர்த்தின. இவன் பொதுத் தொண்டு வலுப்பெற்று அது பதவியாக (கட்சித் தலைவர்) உருப்பெறும் நேரத்தில் கண்ணம்மா தடுத்தாள். வாய் பேசாத கண்ணம்மா வாய் திறந்தது வியப்பளித்தது.

என்ன கண்ணம்மா? நான் தருமத்திற்குத் துணை போவதால் என்னால் எத்தனையோ தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டாய் இப்போ ஏன் தடுக்கிறாய்? என்றான்.

நீங்கள் சுயமா செய்தது தர்மம். பதவியில வந்தா உங்க சுயரூபம் இழக்க நேரிடும். பெரிய பெரிய மகான்களெல்லாம் பதவி வகிக்கில அதனாலதான் தடுக்கிறேன் என்றாள்.

சரி கண்ணம்மா. நீதான் என் குரு. எனக்குப் பதவியில பிடிப்பில்ல. நீ சொன்னா எதுவும் சரியாத்தானிருக்கும் என்று மறுத்துவிட்டான். எல்லோரும் வியந்தனர்.

எங்கே தப்பு நடந்தாலும் தட்டிக் கேட்டான். அதனால் நீதி ஒன்றும் நிலை நாட்டப்படவில்லை. எங்கும் ஊழலும், லஞ்சமும் நடமாடிக் கொண்டுதான் இருந்தது. மனம் வெறித்தான். பொதுத்தொண்டு செய்து பேர் வாங்குவது இவன் நோக்கமன்று, நியாயத்திற்குத் துணைபோகும் குணத்தால் இவன் எதிர்த்துப் போராடுவதைக் கண்ட ஆதரவற்றவர் இவன் துணை வேண்டிய போது உதவினான். அதுவே அவனைத் தொற்றிக் கொண்டது. அநியாயங்களை அக்கிரமங்களைக் கண்டு அலுத்துவிட்டது.

*வாழ்க்கை என நாமறிந்ததில் தவறாது வெற்றி பெறுவது நல்லெண்ணமில்லை, நியாயமில்லை, தைரியமில்லை; பணமில்லை; சட்டமில்லை. ஜெயிப்பது பலம். எவனுக்குப் பலமிருக்கிறதோ அந்த நேரம் அவன் ஜெயிப்பான்.*



*அன்னை சக்தி வாழ்வில் நமக்குப் பலனளிக்கிறது. அதே நேரம் பலசாலியைத் தடுக்கவல்லது. நம் நியாயத்திற்குப் பலன் தரவல்லது.*

**(பேரொளியாகும் உள்ளொளி)**

அலுவலகம் முடிந்து வரும் வழியில் ஒரு குடிகாரன் ஒரு பெண்ணை அடிக்க முயல்வதும், அவள் அழுது விலகுவதும் கண்டு பொறுக்காமல் குடிகாரனைப் பிடித்து நிறுத்தி அடிக்கப் போனான். அந்தப் பெண் ஓடி வந்து இவன் காலில் விழுந்து, அதை ஒண்ணும் செஞ்சிடாதீங்க. அது எம் புருசன். குடிச்சாத்தான் இப்பிடி. மத்தபடி அது ரொம்ப நல்ல ஆளு என்று கெஞ்சினாள்.

வெறுப்புடன் திரும்பினான்.

பணம் குறைத்துக் கொடுத்ததற்காக கூலியாள் கெஞ்சினான். பெரிய மனிதன் போலிருந்தவன் கூலிக்காரனை பிச்சைக்காரனை விரட்டுவதுபோல் விரட்டினான். இவன் அங்கே சென்று ஏன்யா, பார்க்க வெள்ளையும் சள்ளையுமா பெரிய மனுஷன் போலிருக்கே இந்த ஏழையை ஏன் ஏமாத்துறே? என்றான். அவன் ஒரு பெருந்தொகையை ஏழையிடம் கொடுத்துவிட்டு நான் ஏன் விரட்டினேனென்று உனக்குத் தெரியுமா? ரொம்ப நல்லவன்போல் தலையிட்டாயே. அவனை இப்போது என்னை சபிக்கச் சொல் பார்க்கலாம் என்றான் ஏளனமாக. கூலிக்காரன் பெரிய மனிதனைப் பார்த்து நீ நல்லாயிருக்கனும் சாமி. உன் நல்ல மனசு தெரியாம நாந்தான் பேசிட்டேன். நீ ஏஞ்சாமி குறுக்க வந்து மவராசனை சண்டைக்கிழுக்கிற? என்றான். சற்று முன்வரை கெஞ்சிக் கொண்டிருந்தவன் பணத்தைக் கண்டதும் தான் நியாயம் கேட்கப்போய் கிடைத்தது என்பதையே அலட்சியப்படுத்தி இவனை ஒதுக்கியது கண்டு சலிப்புற்றான். என்ன மனிதர்கள் இவர்கள்!

இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே இவனை மாற்றிவிட்டன. இனி எவர் விஷயத்திலும் தலையிடுவதில்லை என்று ஒதுங்க ஆரம்பித்தான். கணவன் ஏதோ சோர்வாய் இருப்பதைக் கண்டாள் கண்ணம்மா.

கண்ணம்மா, நீ சொல்லுவியே எதையும் மேலோட்டமா பாத்து முடிவு செய்யக்கூடாதுன்னு, அது சரின்னு தோணுது. சமூகத்தில் எப்படியோ எங்கோ தீமை புரையோடிவிட்டது. அதைத் தீர்க்க இந்தச் சாதாரண குமரன் பொருத்தமில்லை என்றான். அவன் சூனியமாய் உணர ஆரம்பித்தான். கண்ணம்மா இவனைத் தேற்றத் தொடங்கினாள்.

சிறுவயது முதலே எங்கே தவறு நடந்தாலும் பொறுக்காமல் தட்டிக் கேட்பேன். அது குறித்து எனக்கு ஒரு கர்வமோ, பெருமிதமோ கிடையாது. ஆனால் தவறு செய்பவர் தம் தவற்றை நியாயப்படுத்த மேலும் ஒரு தவறு செய்து பாதிக்கப்பட்டவனும் அதை ஏற்கும்போது எத்தனை கொடுமை அது என்றான்.

வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஓர் அனுபவம். அது ஒரு பாடம். அதன் மூலம் மேலும் ஒருபடி முன்னேறிவிடவேண்டும் என்று கண்ணம்மா ஆறுதலாகக் கூறினாள்.

வேலை முடிந்து குறித்த நேரம் வீடு திரும்பத் தொடங்கி விட்டான். ஆனால் மனதில் ஒரு வெறுமை. ஏதோவொரு பெரியதை நோக்கிச் செல்லவேண்டும் என்று அடிக்கடி தோன்றுகிறது. அதற்கு முதலில் தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டும் என்றும் தோன்றுகிறது.

கண்ணம்மா, உனக்கு இரண்டு பிள்ளைகள் போதுமல்லவா என்றான்.

சீச்சி. இது என்ன கேள்வி. எனக்கு மட்டுமல்ல. நாடே இன்று, நாமிருவர் நமக்கிருவர் என்றல்லவா பேசுகிறது என்றாள்.

நான் அரசாங்கம் அமல்படுத்தும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கேட்கவில்லை. உன் விருப்பத்தைக் கேட்கிறேன் என்றான்.

குழந்தை பெற்றுக் கொள்வதே வாழ்வின் லட்சியமல்ல. நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்பவர்கள்தான் இல்வாழ்வில்



ஈடுபட்டுள்ளனர் என்பதும் இல்லை. சுயக்கட்டுப்பாடு இல்லாதவர்களுக்குத்தான் அரசின் திட்டம். வாழ்வின் செயல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு புனிதம் வேண்டும் என்றாள்.

அதெல்லாமிருக்கட்டும். உனக்குப் பெண் குழந்தையில்லையே. ஒரு வேளை மூன்றாவது பெண்ணாக இருக்கலாம் என்று ஏதேனும் ஆசையில்லையா?

இல்லைங்க ஆனா, பெண்ணோ பெற்ற குழந்தைகளின் பெருமைக்குரிய பெற்றோராய் இருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை.

அவ்வாறெனில் நான் மேற்கொள்ளப் போகும் பிரம்மச்சரியத்திற்கு நீ தடையாக இருக்கமாட்டாயல்லவா?

நிச்சயம் இருக்க மாட்டேன். நீங்கள் மேல் நோக்கிச் செல்லும் போதெல்லாம் நீங்கள் ஏறும் படியாக நானிருப்பேன் என்றாள்.

*... தொடரும்*

... தொடரும்

❊ ❊ ❊


## புதிய வெளியீடுகள்

**கர்மயோகி**

| | |
|---|---|
| **பிரார்த்தனை பலிக்க வேண்டும்** | ரூ. **100.00** |
| **சமூகம் - அதிர்ஷ்ட சாகரம்** | ரூ. **20.00** |
| **சிறியதும் பெரியதும்** | ரூ. **20.00** |
| **Sri Aravindam (English)** | ரூ. **40.00** |
| **ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம்** | ரூ. **40.00** |
| **சச்சிதானந்தம் - வசந்தா** | ரூ. **20.00** |

***தபால் செலவு தனி***

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - சூட்சுமம் வளர்கிறதே.

அண்ணன் - நம் நாட்டில் பலர் சமீபத்தில் ஏராளமாகப் பணம் சம்பாதித்துவிட்டார்கள். இவர்கள் எல்லாம் நான் சொன்ன சட்டத்தில் அடிப்படையானவற்றில் சரியானவர்கள். அதாவது உழைப்பு, திறமை, நாணயம், நேர்மை ஆகியவற்றில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டில்லாமல் எவரும் சம்பாதிக்க முடியாது.

தம்பி - வாழ்வில் தவறாகச் சம்பாதிக்கலாம், அது நமக்குத் தேவையில்லை.

அண்ணன் - தவறாகச் சம்பாதிக்கவும் திறமை வேண்டும். திறமையில்லாமல் முடியாது. இவர்கட்கெல்லாம் ஸ்தாபனம் - வியாபாரம், தொழில் - அஸ்திவாரமாக இருக்கும். தொழில் அவர்கட்கு கருவி, கருவியில்லாமல் பணம் உற்பத்தியாகாது.

தம்பி - ஆகாயத்திலிருந்து பணம் கொட்டாது அல்லவா?

அண்ணன் - ஸ்தாபனம், தொழில் கருவி, கருவி அவசியம், கருவியேயில்லாமல் முடியாது. வலிமை குறைந்தவனுக்கு கருவி அவசியம். வலிமை அதிகமானவனுக்குக் கருவி அவசியமானாலும், ஓர் அளவுக்கு மேல் கருவி தடையாகும்.

தம்பி - கருவியில்லாமலும் பணம் வருமா?

அண்ணன் - கருவி அவசியம். கருவி மூலம் வரும் பணம் சிறியது. கருவியில்லாமல் வருவது பெரும் பணம். பெரும் பணம் சம்பாதிக்கும் திறமை வந்தபின் அவர்கட்குப் பணத்தில் அக்கறையிருக்காது. இது தத்துவம். நடைமுறையில் பல அம்சங்கள் கலந்திருப்பதால் விவரம் புரியாது. தனியே பிரித்து வாழ்வில் உதாரணம் கூற முடியாது. சுமார் 20 வருஷத்தில் ஒருவர் 100 கோடி வியாபாரம் நடத்துகிறார். இவருக்கு இன்று 40-50 கோடி சொத்திருக்கும். இது போன்றவர் பலர். ஒரு சரக்கு உற்பத்தி செய்து வந்து வியாபாரம் மூலம் இந்தச் சொத்து சேர்ந்துள்ளது. இவர் எளிமையான மனிதர். இந்த வியாபாரமில்லாமல் இவரால் 1000 ரூபாய்கூட சம்பாதிக்க முடியாது. வலிமை - மனவலிமை மிக்கவர் - இதுபோல் சம்பாதித்திருந்தால், அவர் தொழிலைச் சுருக்கிக் கொண்டு சிறிய அளவில் செய்தால், அவர் மனவலிமைக்குக் கருவி தடையாக இருந்தது விலகியவுடன், வருமானம் பெருகும். அநேகமாக 100 ஆண்டாக பாங்குகளை ஆரம்பித்தவர்கள் அப்படிப்பட்டவர்கள். ஸ்தாபனம் சாஸ்திரத்திற்கு கருவி. ஆனால் அவர்கள் சம்பாதித்த பெருஞ்செல்வமெல்லாம் புதிய ideas கருத்துக்களால் என்பது உலகறிந்த விஷயம். இன்ஸூரன்ஸ் முதலில் அப்படி ஏற்பட்டதே. பிற்காலத்தில் பெரியதாகிவிட்டது. Stock exchange-உம் இது போன்றதே. இவை நூறாண்டாக உலகில் நடைமுறையிலிருக்கின்றன. நம் நாட்டில் பம்பாயில் மட்டும் இது அதிகம்.

**தெளிவும், வலுவும் உள்ள மனிதன் தன் ஸ்தாபனத்தால் சம்பாதிப்பதை விட, தனக்கு மனதில் தோன்றும் புதிய வியாபாரக் கருத்துகள் மூலம் சம்பாதிப்பது ஏராளம்.**

**அன்பர்கள் அத்துடன் நேர்மையும், நல்லெண்ணமும் சேர்த்துக் கொண்டால் அவர்கள் மன உரம் எந்த அளவு பணமும் தரும்.**

- *மனம் எதையும் சாதிக்கும்.*
- *அன்னை அளவில்லாமல் சாதிப்பார்.*
- *மனத்திண்மை மூலம் அன்னை சாதிப்பது அதிகம்.*
- *சத்தியம், நேர்மையுள்ள மனம் அன்னை மூலம் பொருளை அருளாகப் பெற அதிக வழிகளுண்டு.*

தம்பி - பணம் சுலபமாக சம்பாதிக்கலாம் என்றாகிறது.

அண்ணன் - வாழ்வு கடுமையானது. அதில் பரீட்சை பாஸ் செய்வதே சுலபம். வாழ்க்கையில் எழும் பிரச்சினைகள் நமக்குத் தெரியாதவை. அனுபவப்பட்டு, அதாவது நஷ்டப்பட்டு கற்றுக்கொள்ள வேண்டும். பரீட்சையில் வரும் கேள்விகள் எல்லாம் வகுப்பில் கற்றுக் கொடுத்ததே ஆகும்.

வாழ்க்கை தெரியாத கேள்விகளை மட்டும் கேட்கும்.

பரீட்சையில் தெரிந்த பாடத்தில் மட்டும் கேள்வி கேட்பார்கள். அதனால் பரீட்சை பாஸ் செய்வது மற்ற விஷயங்களைவிடச் சுலபம் என்பது பலர் அனுபவம். பரீட்சை பாஸ் செய்ய அறிவு வேண்டும். பணம் சம்பாதிக்க உழைத்தால் போதும். உழைப்பு அறிவை விடச் சிறியது.

அறிவால் பணம் சம்பாதிக்க முனைபவர் அது எளிது எனக் காண்பார்.

அன்னை அன்பரானால் மேலும் அக்காரியம் எளிது.

கெட்டவனாக இருக்க சாமர்த்தியம் வேண்டும். நல்லவனாக இருக்க சாமர்த்தியமும் தேவையில்லை. அதனால் உலகில் மிக எளிமையான காரியம் பணம் திரட்டுவது.

**எல்லோரும் சமம்**

தம்பி - எல்லா மனிதர்களும் சமம் என்ற கருத்தை ஸ்ரீ அரவிந்தர் விளக்கியுள்ளாரா?

அண்ணன் - ஸ்ரீ அரவிந்தர் நேரடியாக விளக்கியதாக எனக்கு ஞாபகமில்லை. நாம் காணும் ஏற்றத்தாழ்வு உண்மை. சமம் என்பதும் உண்மை. இரண்டும் எப்படிச் சரி என விளக்க முடியும்.

தம்பி - ஜனநாயகத்தில் எல்லோர்க்கும் சம உரிமையுண்டு. சாதனையில் ஏற்றத்தாழ்வுள்ளது. அதுபோலவா?



அண்ணன் - நான் கூறுவது சற்று மாறியது. ஒருவர் 100 காணி நிலம் வைத்திருக்கிறார் அடுத்தவர் 12 வீடு உடையவர். மற்றவர் இதே வருமானத்தைத் தொழிலில் பெறுகிறார் எனில் அனைவரும் சமம் என்று கூறலாமல்லவா?

தம்பி - கிராமத்தில் மற்றவர்கட்கு மரியாதையிருக்காது. ஹைகோர்ட்டில் கிராமத்து மிராசுதாரரைச் சட்டை செய்பவரில்லை. பெரிய வக்கீலுக்கு மரியாதை. ஆனால் இந்த 3 பேருக்கும் ஒரு விஷயத்தில் சமமான இடம் உண்டு.

அண்ணன் - சமூகத்தில் பணத்திற்கு மரியாதையுண்டு. படிப்பிற்கில்லை. ஆன்மீகக் கண்ணோட்டத்தில் எல்லா ஆன்மாவும் சமம். சமமான முயற்சியை வெவ்வேறு துறைகளில் எடுக்கிறார்கள். பிறப்பில் ஆன்மாக்கள் சமம். முயற்சியில் சமம். பலனில் சமம். தோற்றத்தில் சமமில்லை.

தம்பி - அதனால்தான் ஒருவர் மற்றவர் பெற்றதை முயன்றால் பெறலாம் என்று கூறுகிறீர்களோ?

அண்ணன் - அடிப்படையில் சமமான இரு ஆன்மாக்கள் தோற்றத்தில் வேறுபட்டால் தோற்றத்திலும் சமமாகலாம். டவுனில் உள்ள 12 வீட்டை விற்று கிராமத்தில் 100 காணி நிலம் வாங்கினால் கிராமத்தில் தோற்றம் சரியாகிவிடாதா? நம்மை ஒத்தவர்கள் சாதித்ததை நாமும் சாதிக்க விரும்பினால், முயற்சி பலன் தரும்.

தம்பி - என் நண்பன் IAS பாஸ் செய்து கவர்னராக ரிடையராகியிருக்கிறான். நான் உள்ளூரில் ஓட்டல் நடத்துகிறேன் எனில் எப்படிச் சமமாக முடியும்?

அண்ணன் - முயன்றால் முடியும். அரசியல் மூலம் அது நடைபெறும். எதுவும் முடியும் என்பது பூரண யோகச் சித்தாந்தம். அதற்காக அப்படியெல்லாம் சோதனை செய்ய வேண்டும் என்று அர்த்தமன்று. கணவனுடைய

தவப்பலன் மனைவிக்குண்டு என்பது அதுபோல் அல்லவா?

தம்பி - தவம் செய்யும் கணவன் தவத்தைவிட மனைவியை அதிகமாக நினைப்பதால் அவளுக்கு பலன் போய் சேருகிறது. திருமணமானவன் மனைவியை நினைக்கிறான். பிரம்மச்சாரி சக்தியை வழிபடுகிறான். இரண்டும் சமம்.

**உலகம் புதிய கருத்தை ஏற்பது**

தம்பி - ஸ்ரீ அரவிந்தர் 80 ஆண்டுகட்கு முன் எழுதியதை உலகம் இன்றுவரை அறியவில்லை.

அண்ணன் - உலகம் சுலபத்தில் எதையும் ஏற்காது. ஏற்றுப் பலன் பெற்றதையும் ஏற்றதாகச் சுலபமாகச் சொல்லாது. எதிரி ஏற்பது அதனினும் கடினம்.

தம்பி - ஏசுவைக் கொலை செய்ததற்காக யூதர்களை மன்னித்து போப் 2000 வருஷம் கழித்து அறிக்கை விட்டார்.

அண்ணன் - பெர்லின் சுவரை இடிக்க முனைந்தவர் கோர்பசாவ். அது 10 ஆண்டாயிற்று. இப்பொழுதுதான் அவருக்கு பெர்லின் விருது அளித்துள்ளது. சாவித்திரியின் பெருமையை இங்கிலாந்து ஏற்குமா?

தம்பி - நந்தனாரைச் சிதம்பரம் தீஷிதர்கள் இன்றுவரை ஏற்கவில்லையே! கிருஷ்ணன் பிறந்த குலம் என்பதால் இடையர் குலம் உயர்ந்ததாயிற்றா? புரட்சி பலன் தரலாம். அக்கருத்துகளை முழுவதும் ஏற்பது எளிதன்று. அதுவும் எதிரி 1000 ஆண்டுகள் பொறுத்திருப்பான். முடிவாக ஏற்பான் எனக் கூறமுடியாது. பக்தர்கள் அன்னையை ஏற்றபின் பழைய சாங்கியங்களை சுலபமாக விடுவதில்லை என்பதில் எந்த ஆச்சர்யமுமில்லை.



அண்ணன் - மாற்றம் சிரமம். முழு மாற்றம் காண்பது அரிது. நாம் தேடுவது உருமாற்றம். மேலும் திருவுருமாற்றம் காண்பது அரிது. ஐன்ஸ்டீன் பெரிய formula சூத்திரத்தைக் கண்டுபிடித்தார். உலகம் ஏற்காது என்பதால் சூத்திரத்திற்கு எதிரானதைச் சூத்திரத்துடன் சேர்த்து எழுதினார். நாளான பின் உலகம் ஏற்றது. ஐன்ஸ்டீன் சூத்திரத்தை மாற்றிவிட்டார். உலகம் சுலபமாக ஏற்காது. உலகம் ஏற்க வேண்டுமென நாம் எதிர்பார்ப்பது அவசியமில்லை.

**பிரம்மரிஷி**

தம்பி - ஐன்ஸ்டீனை பிரம்மரிஷி என்று கூறலாமா?

அண்ணன் - ரிஷிகள் மேலிருந்து கூறியதை ஐன்ஸ்டீன் கீழிருந்து கண்டுபிடித்தார். கம்பன் இராமாயணம் எழுதினார். நாம் அதைப் படித்துப் புரிந்து கொள்கிறோம். கம்பனும், நாமும் இராமாயணத்தில் சந்திப்பதைப்போல் ரிஷிகளும் ஐன்ஸ்டீனும் ஞானத்தில் சந்திக்கின்றனர்.

தம்பி - நீங்கள் சொன்ன புத்தகத்தில் சீனுவாச இராமானுஜம் இதுவரைப் பிறந்த கணித நிபுணர்களில் முதன்மையானவர் என்று கூறுகிறது.

அண்ணன் - ராமானுஜம் படுக்கையாக இருந்தார். ஹார்டி என்ற பேராசிரியர் அவரைப் பார்க்க வந்தார். 6 theorem களை இராமானுஜம் அவரிடம் கூறினார். ஹார்டிக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு theorem எழுத ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதன் முடிவாக வெளி எழுவதே theorem. எப்படி தலையிலிருந்து theorem வருகிறது என ஹார்டி ஆச்சரியப்பட்டார்.

தம்பி - எப்படி ராமானுஜம் சொன்னார்?

அண்ணன் - நாமெல்லாம் ஒருவர் பாடுவதைக் கேட்டுப் பாடுகிறோம். தானே உள்ளிருந்து சிலருக்குப் பாடல் எப்படி எழுதுகிறதோ, அதே போல் theorem எழுகிறது. Theorem என்பது ஜடப்பொருளைப் பற்றிய உண்மை. அதையே formula என்கிறோம். 6" நீளம் 3" அகலமுள்ள நீண்ட சதுரத்தின் பரப்பை 6x3 = 18 சதுர அங்குலம் என்கிறோம். நீண்ட சதுரத்தை சதுர அங்குலங்களாகப் பிரித்தால் நீளத்தில் 6 சதுர அங்குலங்களும், அகலத்தில் 3உம் இருக்கும். எண்ணிப் பார்த்தால் 18 இருக்கும். நாம் எண்ணிப் பார்த்து அறிவதை சூத்திரம் தெரிந்தவன் 6x3 = 18 என்பான். அது நமக்கு ஆச்சரியமாக இருக்கும். உள்ளிருந்து பாடல் எழுவதுபோல் ஞானமுள்ளவனுக்கு பார்த்தவுடன் 18 தெரியும். அது ஞானம். இராமானுஜம் அதேபோல் பெரிய சூத்திரங்களை அறிகிறார். உலகத்து சரித்திரம் சூட்சும உலகிலிருக்கிறது என்கிறார் அன்னை. அங்குப் போனால் சரித்திரம் முழுவதும் தெரியும். Mantra of Life வாழ்வின் மந்திரத்தை அன்னை அது போல் கண்டார். மனம் தியானத்தால் மேலே போகும். ஞானம் மேலேயிருக்கிறது. மனமும் ஞானமும் சந்தித்தால் சூத்திரம் எழும். முதிர்ந்த ஞானமுடையவனுக்கு இயல்பாகத் தெரிவது மாணவனாக இருப்பவனுக்கு கணக்குப் போட்டு, ஆராய்ச்சி செய்து அறிய வேண்டியிருக்கிறது. இராமானுஜத்தின் முன் பேராசிரியர்கள் மாணவர்கள் போலிருக்கிறார்கள். இது இந்தியாவின் பெருமை. நாம் இதை இன்றுவரை அறியவில்லை.

*தொடரும்...*

❋ ❋ ❋

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## கவசம்

சூட்சுமப் பார்வையுள்ளவர்க்கு அன்னையின் செயல் விவரமாகத் தெரியும். மற்றவர்க்கு முடிவு தெரியும், 20 கார்ட் அன்னையிடம் வரும் பொழுது மேலேயுள்ள கார்டுகளை விலக்கி நடுவேயுள்ள கார்டை அன்னை எடுத்து 25ந்தேதி - மாலை மணி 3 என எழுதினார். பிறந்தநாள் தரிசனத்திற்கான தரிசனம். சூட்சுமப் பார்வையுள்ளவர்க்கு அக்கார்ட் மட்டும் பளிச்செனத் தெரியும். கார்டுக்குரியவர் 3 நாள் இடைவிடாமல் அன்னையை அழைப்பதால் கார்ட் பிரகாசமாக இருக்கிறது. அன்னை அதைத் தேடி எடுக்கிறார்.

பஸ்ஸில் கூட்டமானபொழுது ஒரு சீட் காலியாக இருக்கிறது, எவரும் அங்கு போய் உட்காருவதில்லை. சூட்சுமப் பார்வையுள்ளவர் பார்வைக்கு அந்த சீட்டில் வெளிச்சம் தெரிகிறது. சற்று நேரம் கழித்து ஒரு பக்தர் வந்து அதில் உட்காருகிறார். பக்தர் அன்னையை பஸ்ஸிற்கு அனுப்பியதால் சீட் பளிச்சென இருப்பது நம் கண்ணுக்குத் தெரியவில்லை. சீட் அவருக்காகக் காத்திருக்கிறது.

- ரோட்டில் போகும்பொழுது முன்னே அனுப்பிய அன்னை சென்றபொழுது ஒளிமயமாக இருக்கிறது.
- ஜீப் பள்ளத்தின் மீது வந்தபொழுது விழாமல் தாண்டியதை ஆச்சரியமாகப் பார்த்து அனைவரும் கூக்குரலிடும்பொழுது ஒரு மூதாட்டி தாய் தன் முந்தானையைப் போட்டு பள்ளத்தை மூடினார் எனக் கண்டார்.
- உரம் வைக்க விட்டுப்போன மரம் முதலாளியைப் பேர் சொல்லி அழைக்கின்றது.
- ஊரில் குடியை நிறுத்த முடிவு செய்த சமயம் அந்த ஊர் பக்தருக்கு சமாதியில் சாராயம் வெளியே போகிற வாசனை வருகிறது.
- படத்தில் அன்னையின் உருவம் உயிருடனிருக்கிறது.

கணவன் Life Divine பிரசங்கம் செய்கிறார். அவர் சொற்பொழிவை மனைவி எழுதினாள். நிறுத்தி, நிதானமாக அழகாக 14 பக்கம் எழுதினாள். சொற்பொழிவு முடிந்தது. சிறப்பாக இருந்தது. அடுப்பில் எண்ணெய் காய்கிறது. அவசரத்தில் எண்ணெய் சிதறி கைமேல் பெரிய அளவில் பட்டுவிட்டது. கொதிக்கும் எண்ணெய் கையைச் சுடவில்லை. எதற்கும் டாக்டரிடம் காட்டுவோம் எனக் காட்டினார். காயமில்லை, உள் காயமுமில்லை என்றார் டாக்டர். சூட்சுமப் பார்வையிருந்தால் Life Divine கைமீது கவசமாக படர்ந்திருந்தது தெரிந்திருக்கும்.

Life Divine எழுதிய கைக்கு Life Divine கவசமாகும்.

## தலைகீழான அனுபவம்

கடையில் நெருக்கடி வந்து பல வழியை நாடி, முடிவில் அன்னை காப்பாற்றியபொழுது வியாபாரி அறிந்தவை இரண்டு.

1. அன்னை சக்தி வாய்ந்த தெய்வம்.
2. அன்னையை அனுப்பினால் நடக்காதவை நடக்கும்.

வியாபாரத்தில் நெருக்கடி தீர்ந்தது. இனி நிம்மதி. இவர் திருமணமாகியவர். 15, 18 வருஷமாகிறது. குழந்தை வேண்டாம் என்ற முடிவுள்ள தம்பதியர். அவர் மனைவிக்கு குதிரை சவாரி பிரியம். கிராமத்தில் வீடுண்டு. குதிரையுண்டு. மனைவிக்காக கணவனும் அவற்றை ஏற்பார். கானடா நாட்டு மக்கள். அவர் மனைவிக்கு எரு வாரிக் கொட்டுவதில் அலாதி பிரியம். மனைவிக்காக கணவனும் செய்வார். இந்த சமயங்களில் மனைவி சற்று அதிகமாக அதிகாரம் செய்வார். கடையின் அனுபவம் அவருக்கு ஓர் எண்ணம் கொடுத்தது. ஏன் மனைவிக்கு அன்னையை அனுப்பக் கூடாது என்பது அந்த எண்ணம். அனுப்பினார், மனைவி பொறுக்கமுடியாத அளவு அதிகாரம் செய்ய ஆரம்பித்தார். புரியவில்லை. அன்னை போனால் நல்லது தானே நடக்கும். ஏன் இந்தத் தலைகீழ் அனுபவம். இதைக் கற்பித்த நண்பரை விசாரித்தார். நண்பர் பரிகாரம் கூறினார். மனைவிக்கு அன்னையை அனுப்புவதற்கு பதிலாக சாந்தியை அனுப்பச் சொன்னார். பிரச்சினை தீர்ந்தது. மனைவி முன்பை விட அமைதியாக, அடக்கமாகிவிட்டார். பிரச்சினை தீர்ந்தாலும் theory தத்துவம் தெரிந்து கொள்ள அன்பர் ஆசைப்பட்டார். தத்துவம் எளியது, பின்பற்றுவது கடினம். பிரச்சினை எளிமையில் தீரும்.

- அன்னையை அனுப்பினால் அன்னை சக்தி மனைவிக்குப் போகிறது. அவர் அதிகாரம் வளர்கிறது.
- அன்னையை அனுப்புவது எளிது. மனைவியை சமர்ப்பணம் செய்வது கடினம். சமர்ப்பணத்திற்கு நல்ல பலனிருக்கும்.
- அமைதி அகங்காரத்தை அமைதிப்படுத்தும்.
- சமர்ப்பணத்தில் அன்னை முடிவை மனம் ஏற்க வேண்டும். நாம் எதிர்பார்க்கக் கூடாது. அது கடினம்.